பக்கங்கள்: பத்து

09 AUG 1998

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 24 ஞாயிற்றுக்கிழமை (09-08-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 217

## பிரதேச சபை உறுப்பினர் உட்பட 12பேர் குண்டுத் தாக்குதலில் காயம்

கொழும்பு, ஓக. 9

கேகாலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் உட்பட 12 பேர் காயம் அடைந்தனர்.

கேகாலை — நம்புக்கனை வீதியில் இவர்கள் பஸ் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம் இரவு 11-00 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கேகாலை மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் அடுத்த வாரம் முற்பகுதியில் ஜனாதிபதி மக்கள் சேவை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு விட்டு பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீதே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் கேகாலைப் பிரதேசசபை உறுப்பினரான அனுருத்த சம்பத் ஜயசுந்தர என்பவரே காயம் அடைந்த பிரதேசசபை உறுப்பினர் ஆவார். இவர் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிதிபால டேவிட்டின் சகோதரர் எனவும் தெரியவந்துள்ளது.

குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் ஒருவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கணவன் - மனைவி சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஓக. 9

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்தில் மலேரியா தடுப்புப்பிரிவுத் தொழிலாளி ஒருவரும் அவரது மனைவியும் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆர். இராஜரெட்னம் (45 வயது) நாகேஸ்வரி 37 வயது) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

இரவு சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் வீட்டுக்குவந்த இனந்தெரியாத நபர்கள்இருவரையும் சுட்டு விட்டுசென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## கொரியக் கப்பலை பயன்படுத்தும் திட்டம் சாத்தியம் இல்லை!

### பயணிகள் சேவைக்கு லங்கா முடித்த?

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 9

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கு "டெமோக்கிறஸி" என்னும் தென்கொரியக் கப்பலைப் பயன்படுத்தும் திட்டம் பெரும்பாலும் கைவிடப்பட்டு விட்டதாகத் திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக வட்டாரங்கள் நேற்று இரவு தெரிவித்தன.

வவுனியா மற்றும் மன்னார் திருமலைப் பகுதிகளில் யாழ். செல்வதற்காக தங்கியுள்ள ஆயிரக்கணக்கான அகதிகளை திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறைக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்க வடமாகாண மீள குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை தென்கொரிய கப்பலான டெமோக்கிறஸியை வாடகைக்கு அமர்த்தியிருந்தது.

கப்பல் தொடர்பான விவரங்களை அறியவும்—

பயணிகள் கப்பல் சேவையில் பயன்படுத்துவதற்கான வசதிகள் குறித்து ஆராயவும்—

இலங்கை அதிகாரிகள்குழு ஒன்று தென்கொரியாவுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தி விட்டு திரும்பி இருந்தது.

இதனையடுத்து கடந்த மாதம் 18 ஆம் திகதி தென் கொரியக்கப்பல் திருமலைக்கு வந்து சேரும்என எதிர்பார்க்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

### 605 அகதிகள் நேற்று பஸ் மூலம் திருமலைக்கு!

#### மாத இறுதியில் யாழ். வருவர்

திருகோணமலை ஓக. 9

திருகோணமலைக்கும் — காங்கேசன்துறைக்கும் இடையில் இந்த மாத இறுதியில் நடத்தவென உத்தேசிக்கப்பட்டுள்ள "லங்கா முடித்த" பயணிகள் கப்பல் சேவை மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதற்கென மன்னாரிலிருந்து 605 அகதிகள் நேற்று திருமலைக்கு பஸ்மூலம் அழைத்து வரப்

(10 ஆம் பக்கம் பார்க்க)



சூடு ஆறின விஷயங்களைக் கிளறுகினம். சூடு பிடிக்கும் விஷயங்களை கிளறாமல்...!

## காமினி கொலை குறித்து மீண்டும் விசாரணை

கொழும்பு, ஓக. 9

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காமினிதிஸநாயக்க கிராண்ட்பாஸ் வீதியில் இடம்பெற்றகுண்டு வெடிப்பு சம்பவத்தில் பலியானது குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களம் மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குண்டு வெடித்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பெண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே செல்லவிருந்த ஒன்பது தமிழர்கள் கைது!

கொழும்பு, ஓக. 9

நோர்வே செல்லவிருந்த 3 பெண்கள் உட்பட 9 தமிழர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களில் இரு குழந்தைகளும் அடங்குவர்.

## கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 9

கிழக்குஆபிரிக்கநாடுகளான கென்யாவிலும் தன்சானியாவிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் அருகே நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களை அடுத்து கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கும் கொழும்பு கறுவாக்காட்டில் உள்ள அமெரிக்க தூதுவரின் வாசஸ்தலத்துக்கும் மேலதிக பாதுகாப்பு போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குண்டுத் தாக்குதல்களை அடுத்து உலகெங்கும் உள்ள தனது தூதரகங்களின் பாதுகாப்பை அமெரிக்கா பலப்படுத்தி உள்ளது. (இ)

## செம்மணிப் புதைகுழிகளை தோண்ட நிபுணத்துவ உதவி பெறவேண்டும்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 9

"செம்மணிப் புதைகுழிகள் தோண்டுவதும் அங்கு உள்ள சடலங்கள் மற்றும் அவற்றின் பகுதிகளை இனங்காணுவதும் நிபுணத்துவ உதவியுடன் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும்."

மேற்கண்டவாறு யாழ். சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்கோரியுள்ளது.

யாழ். குடாநாட்டில் சிவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா சுற்றிவளைப்பில் இளைஞன் சூட்டுக்குப் பலி!

### சடலம் செஞ்சிலுவையிடம்

வவுனியா, ஓக. 9

வவுனியா கிழக்கு செக்கடிப்புலவு என்ற இடத்தைச் சுற்றிவளைத்த படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை இரவு இச் சம்பவம் இடம் பெற்றது.

கொல்லப்பட்டவரின் சடலம் நேற்று வவுனியாவில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் நேற்று இச் சடலத்தை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு அனுப்பிவைத்தனர்.

அதேசமயம் சுற்றிவளைப்பின்போது கிரனேட் ஒன்றையும் வேறு சில வெடிபொருட்களையும் தாம் மீட்டுள்ளதாகவும்—

சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள் எனவும்—தெரிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம் வரவேற்கின்றோம்



கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தின் தலைவர்

### திரு. இராமலிங்கம் குழந்தைவடிவேலு

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இறை பக்தியுடைய இவர் என்றென்றும் மக்களுக்கு சமூக சேவை செய்ய வேண்டுமென கைதடி கயற்றசிட்டி முருகனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**பிருந்தா நகைமாடம்**

301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(58229)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் ஞானசேகரம் (திரவி)

கருகம்பனையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு., திருமதி சுப்பிரமணியம் (ராசா) தம்பதிகளின் புதல்வன் ஞானசேகரன் 7—8—1998 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் ரஞ்சியினது கணவரும், ஜெசிக்காவினது தந்தையும், புஸ்பராணி (லண்டன), கமலராணி (நமீபியா), இந்திராணி, கணேசசெல்வம் (பிரான்ஸ்), தனபாலகுமார் (லண்டன்), பத்மநாதன் (லண்டன்), பத்மராணி (நமீபியா) ஆகியோரின் சகோதரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இந்திராணி
(சகோதரி)

561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(58230)

### சுந்தரம்பிள்ளை தேவராஜா

கந்தர்மடம் அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை தேவராஜா 05. 08. 98 புதன்கிழமையன்று பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை தங்கம்மாவின் புதல்வரும், சர்வேஸ்வரியின் அன்புக் கணவரும், சரணியாவின் அன்புத் தந்தையும், நல்லூர் காலஞ்சென்ற வல்லிபுரம் (ஆசிரியர்) மாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி தியாகராஜா, பாக்கியராஜா, ஆனந்தராஜா, சண்முகராஜா, காலஞ்சென்ற ஜெயராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், படிகலிங்கம், மாணிக்கலிங்கம், இரத்தினலிங்கம் கனகேஸ்வரி, விங்கேஸ்வரி, நிர்மலேஸ்வரி, பஞ்சலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ஜெயந்தி, சுகந்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10. 08. 98 திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
வ. மாணிக்கலிங்கம்
மரக்கூட்டுத்தாபனம்
(நல்லூர்)

32, மூத்தவிநாயகர் வீதி
நல்லூர்.

(58223)

### விக்ரர் பிரீடன்

மானிப்பாய் மெமோறியல் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரீடன் சிலாபத்தில் காலமானார்.

அன்னார் விக்ரர் ஜெயமணி (உரிமையாளர், விக்ரரி சலூன்) ஆகியோரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற யாக்கோப்பு முத்தம்மா, அந்தோனிப்பிள்ளை, நேசம்மா ஆகியோரின் பேரனும், பிறியா, வினி, பிரசன்னா, பிரசாந் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று 08-08-98 சனிக்கிழமை சிலாபத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எமலியான்ஸ்
(மாமன்)

சி. தேவராஜா
போட்ஸ் றோட்,
சிலாபம்.

(58220)

## குருநகர்ப் பகுதியில் மின் தடை

குருநகர், ஓக. 9

குருநகர்ப்பகுதிக்கான மின் விநியோகம் கடந்த சில நாள்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டதற்கான காரணம் தெரியவரவில்லை.

மின்தடை காணமாக ஜி. சீ. ஈ. உயர்தரப்பரீட்சைக்காகப் படிக்கும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-51)


**99 1st in Com & G. A. Q.**

வர்த்தகம்
முகாமைக் கற்கை
Mr. BASIL, B.B.A.
ஆரம்பம்: 09-08-98
SUNDAY 2.30 p m.
ENGLISH. ECON., HINDU, CHRIST மற்றும் வகுப்புகளும் ஆரம்பம்.

★ புலமைப் பரிசில் YEAR 5
(தற்பொழுது Year 4 இல் கற்கும் மாணவர்களுக்குரியது)
ஆரம்பம்: 09-08-98
SUNDAY 3.00 p m.

**SHAMROCK**
யாழ். ஈச்சமோட்டை.
(சி/4503)

**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்
09 - 08 - 98 மட்டும்
ரோஜா
10 - 08 - 98 முதல்
சுப்பர் ஸ்ரார் ரஜனி
நடித்த
**பாட்ஷா**
காட்சிகள்:- 10-30, 2-30
(58231)

**ஸ்ரீ செல்வா**
சினிமா
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
ராம்கி, ரோஜா
மன்சூர் அலிகான்
நடித்த
ராஜாளி
( புதிய பிரதி )
தினசரி:- 10.30, 2.30
(58232)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
இந்தியாவில்
200 நாள்களுக்கு மேல்
ஓடிய
சிவாஜி - ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசு
சத்தியராஜ் நடித்த
முதல் மரியாதை
( குடும்பச் சித்திரம் )
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4489)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று மட்டும்
பொற்காலம்
திங்கள், செவ்வாய்
அருண்குமார், மந்தாரா
ப்ரியம்
புதன், வியாழன்
சிவாஜி - சாவித்திரி
கண்ணாம்பாள் நடித்த
காத்தவராயன்
நேரம்:- 10-30, 2-30
Tele. No. 070-212223
(58135)


## மருந்து தட்டுப்பாடு

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், போலியோ மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில்வைத்தே குழந்தைகளுக்கு போலியோ மருந்து ஏற்றப்பட்டு வருவது வழமையாகும்.

இதேவேளை இங்கு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்றப்படும் ஏற்புத் தடை ஊசி மருந்தும் முடிவடைந்த நிலையிலிருப்பதாகத் தெரிய வருகின்றது.

(இ-109)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### தங்கேஸ்வரி கந்தசாமி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 - 05 - 1932 | 30 - 06 - 1998 |

(ஆன்ம சாந்திக்கிரியைகள் 09 - 08 – 1998 ஞாயிறு)

திதி நிர்ணயப் பாடல்

வண்ணை நகர் வந்துதித்த
வளர்கந்த சாமி மனை
பெண்களுக்கே நற்றிலகம்
பேர் தங்கேஸ் வரிநங்கை
எண்ணுவெகு தானியசேர்
ஏரானி பூர்வபக்கம்
புண்ணியசப் தமித்திதியில்
பொன்னாடு சேர்ந்தனளே!

எங்கள் குடும்பத்தலைவி திருமதி தங்கேஸ்வரி கந்தசாமி அவர்களின் ஆன்மா சாந்தியுறும் வண்ணம் இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

ஆ. கந்தசாமி [கணவர்]
மக்கள், மருகர், பேரர்.

15/2, சிவப்பிரகாசம் றோட்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(58227)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 10 |
| 02 | 07 |
| 1930 | 1998 |



திருமதி

### பூமணி ஜோசப் பிரான்சிஸ்

(யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை முன்னாள் உபஅதிபர்)

"நீங்கள் இறந்து விட்டீர்கள்; உங்கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது"

கொலோசேயர் 3: 3

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

12/ 1, புகையிரதவீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(58225)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மாநகர நிர்வாகத்தை சிறப்புற நடத்துவதற்கு புலிகளின் ஒத்துழைப்பைக் கோரும் முதல்வர்

இனந் தெரியாத ஆயுத பாணிகளின் அச்சுறுத்தல் களைக் கட்டுப்படுத்துவதற்கும் மாநகரசபை நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்துவதற்கும் விடுதலைப்புலிகளுடைய ஒத்துழைப்பை நாம் எதிர் பார்க்கிறோம்— என்று யாழ். மாநகர முதல்வர் பொன். சிவபாலன் உதயனுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

எமது செய்தியாளரின் கேள்விகளுக்குப்பதிலளிக்கையில் அவர் தெரிவித்த கருத்துக்கள் இவை:

தூய கறைபடியாத மக்கள் சேவை புரிவதற்காகவே வந்தோம். எங்களது மக்கள் சேவைக்கான நடவடிக்கை தமிழர்களின் இலட்சியப் பாதைக்கு ஒருபோதும் தடையாக இருக்காது.

இந்த வேளையில் சந்தர்ப்பவாதிகள் நுழைந்து இலட்சியத்தை முறியடிக்க நாம் அனுமதிக்க முடியாது. எனவே தான் மரணத்தையும் பொருட்படுத்தாது இங்கு அரசியல் பிரவேசம் செய்தோம்.

வன்னியிலிருந்து போராடுபவர்கள் எமது இரத்தங்கள். இளம் சமுதாயம் அழிந்து போக விடக்கூடாது. இளைய சமுதாயம் அழிந்துபோனால் ஓர் இனமே அழிந்து விடும்.

ஒரு பகுதி மக்கள் ஒரு நேர உணவுக்குக் கூட வழியில்லாமல் இன்னற்பட்டுக் கொண்டிருக்க நாங்கள்இங்கு சுகபோக வாழ்வு நடத்தக் கூடாது. அதனால்தான் முதல்வருக்கு என ஒதுக்கப்பட்ட ஆடம்பர வாகன வசதியை வேண்டாமென்று ஏற்காது விட்டேன்.

**மக்களின் தேவை**

நான் மேயராக பதவியேற்ற குறுகிய காலத்தில் மக்கள் பலரைச் சந்தித்தேன். இச்சந்திப்புகளிலிருந்து மக்களுக்கு இப்போது முதலாவது தேவைப்படுவது யுத்த நிறுத்தமே என்பதை அறிந்து கொண்டேன்.

மீளக்குடியேறிய மக்கள் கோபத்துடனும், ஏமாற்றத்துடனும் இருப்பதையும் அவ

## யாழ். மக்கள் ஏமாற்றத்துடன் இருப்பதை உணர்ந்துள்ளேன்

தானித்துள்ளேன். அவர்களின் ஆத்திர உணர்வு நியாயமானது என்பதை உணர்கின்றேன். ஏனெனில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வு இரண்டையுமே இப்போதைக்கு நடைமுறைப் படுத்துவதற்கான அறிகுறியே தென்படவில்லை.

மக்களை மீள வரவழைத்துவிட்டு வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்காமையினால் அவர்கள் கோபப்படுவதில் நியாயம் உண்டு.

இந்தக் கோபமும், ஏமாற்றமும் எங்கள் மீது மக்களுக்கு ஏற்படுவதும் தவிர்க்க முடியாதுதான். எனவே மக்களிடமுள்ள ஏமாற்றத்தைப் போக்கவும், அவர்களின் கோப உணர்வைத் தணிக்கவும் யுத்த நிறுத்தத்துடன் ஓர் அரசியல் தீர்வுக்கான இடைக்கால ஏற்பாட்டை என்றாலும் ஏற்படுத்தித் தருமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

**பேச்சுக்கு இணங்க வேண்டும்**

அரசும் விடுதலைப் புலிகளும் மக்களின் நல்வாழ்வுக்காக ஒரு தீர்வினை எட்டக்கூடிய பேச்சுவார்த்தைக்கு இணங்க வேண்டும்.

எம்மைச் சுற்றியுள்ள மக்கள் எம்மீது சந்தேகமும், கோபமும் கொண்டுள்ளனர் என்பதை நான் அறிந்து கொண்டுள்ளேன்.

போராளிகளின் பெயரைப் பயன்படுத்தி சந்தர்ப்பவாதம் பேசி அரசியல் தலைமைத்துவத்தைப் பெற்று மக்களின் சுதந்திர விடுதலை உணர்வை மழுங்கடிக்க முனையும் கபடதாரிகள் சமாதான நடவடிக்கைகளுக்



கும் மற்றும் யுத்த நிறுத்தம் மூலமான தீர்வுக்கும் தடையாக இருக்கிறார்கள்.

மக்கள் ஆட்சியில், குடியியல் நிர்வாக கட்டமைப்பு, தனது உயரிய அந்தஸ்தையும், கௌரவத்தையும் அதிகாரத்தையும் நிலை நாட்டக்கூடிய சகல நடவடிக்கைகளையும் பாதுகாப்புத்துறையினர் வழங்க வேண்டும். அது இல்லாது விட்டால் அதற்கான கட்டளையை வழங்க வேண்டியது ஜனாதிபதியின் கடமையாகும். இந்தக் குறைபாடுகள் குறித்து ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசவுள்ளேன்.

**அப்பாற்பட்ட விடயமல்ல**

மக்களின் வீடுகளிலுள்ள அவற்றுக்கு அருகிலுள்ள பாதுகாப்புப் படையினரின்

**பேட்டி: கேசரி**

பிரசன்னங்களை எங்களுக்கு அப்பாற்பட்ட விடயமென்று ஒதுக்கி வைக்க முடியாது. இது பற்றி நாம் அக்கறை கொள்ளாது விட்டால் அத்தகைய சக்திகளை ஊக்குவிப்பவர்களாகவே மக்கள் எம்மைக் கருத இடமுண்டு. இத்தகைய நிலைப்பாட்டை மாற்றுவதற்காக அரசும் புலிகளும் விரைவாக சமாதானத்துக்கு வரவேண்டிய அவசியம் இருக்கிறது.

எமது வீட்டிற்கு வெளியில் பாம்பு இருந்தால் அடிக்கலாம். வீட்டிற்குள் வந்து விட்டாலும் அடிக்கலாம். அது வீட்டிற்குள் வந்து பிள்ளைகளைச் சுற்றி விட்டால் சாதுரியமாகத்தான் அதனைக் கழற்ற வேண்டும்.

நல்லை ஆதீன முதல்வரிடமும், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியிடமும் சென்று ஆசீர்வாதம் பெற்றுள்ளோம். நல்லை ஆதீனமுதல்வர் மேலங்கி ஒன்றை போர்த்தி ஆசீர்வாதம் வழங்கினார். யாழ். ஆயரிடமும் ஆசீர்வாதம் பெறவுள்ளோம்.

**குருவாரம்**

கல்வி கற்பித்த ஆசிரியர்களை மதிக்கும் முகமாக யாழ். மாநகர சபை எல்லைக்குள் குருவாரம் ஒன்றை அனுஷ்டிக்கவுள்ளோம்.

அண்மையில் காலமான கலாநிதி க. கனகராசாவின் வீட்டிற்கு நேரில் சென்று மாநகரசபையின் சார்பில் எமது அஞ்சலிகளைத் தெரிவித்துள்ளோம்.

நாளை பத்தாம் திகதி இலங்கையிலுள்ள மாநகர சபை முதல்வர்களின் ஒன்றுகூடல் கொழும்பு மாநகர சபையின்முதல்வர்கரு. ஜெய

(4ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## சாகும் போதும்... தானம் வழங்கும் மரம்

ஒரு மரம்; அது ஒரு சிறுவனை நேசித்தது.

ஒவ்வொரு நாளும் சிறுவன் வருவான். இலைகளைச் சேகரிப்பான், அவற்றை முடியாக்கி காட்டின் அரசனாக விளையாடுவான்.

அடிமரத்தில் ஏறி கிளைகளில் தொங்கி ஊஞ்சலாடி அப்பிள் பழங்களை உண்பான்.

களைத்தபோது அதன் நிழலிலே துயில்வான்.

சிறுவனும் மரத்தை மிக நேசித்தான், மரம் மகிழ்ந்தது!

காலம் கழிந்தது சிறுவன் வளர்ந்து பெரியவனானான்.

மரம் அடிக்கடி தனிமையில் நின்றது.

ஒருநாள் சிறுவன் மரத்திடம் வந்தான். மரம் சொன்னது: ''வா குழந்தாய் எனது அடிமரத்திலேறி கிளைகளில் தொங்கி ஆடு. அப்பிள் பழங்களை உண்டு எனதுநிழலில்விளையாடி மனதில்மகிழ்வெய்துவாய்.''

''ஏறி விளையாட நான் பெரியவனாகி விட்டேன்'' என்றான் சிறுவன்.

''நான் பொருள்கள் வாங்கி மகிழ்ந்திருக்க விரும்புகின்றேன். எனக்குப் பணம் தேவை எனக்கு நீ பணம் தருவாயா?

ஆங்கில மூலம்: SHEL SILVERTEIN
தமிழில்: இரா சந்திரசேகரன்

''நான் வருந்துகின்றேன்'! மரம் சொன்னது: ''பணம் என்னிடம் இல்லை. நான் இலைகளையும், பழங்களையும் மட்டுமேயுடையேன். எனது பழங்களை எடு குழந்தாய், நகரத்தில் விற்பனை செய், பணம் பெறுவாய், பின்னர் மகிழ்ந்திருப்பாய்.''

சிறுவன் மரத்திலேறி பழங்களை உலுப்பிச் சேகரித்தான்; எடுத்துச் சென்றான்.

மரம் மகிழ்ந்தது. ஆனால் சிறுவன் நீண்ட காலம் வாராதிருந்தான். மரம் துயரத்தில் ஆழ்ந்திருந்தது.

ஒருநாள் சிறுவன் திரும்பி வந்தான். மரம் மகிழ்ச்சியில் குலுக்கிக் கொண்டது. ''வா குழந்தாய் அடிமரத்திலேறி கிளைகளில் தொங்கி ஆடி மகிழ்ந்திரு'' என்றது மரம்.

''எனக்கு மரத்திலேற முடியாதளவுக்கு அதிக சடுபாடுகள்'' என்றான் சிறுவன். ''எனக்கொரு வீடு வேண்டும் என்னைக் குளிரிலிருந்து பாதுகாக்க'' என்றான்.

மேலும் அவன் சொன்னான் எனக்கொரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நோய் வராமல் தடுக்கும் மருந்து காலம்வகுத்து அளந்து உண்ணுதலே

## விஞ்ஞானம்வளருமுன்பே வள்ளுவர் கூறியது

**ஆறு. திருமுருகன்**

விஞ்ஞான உலகம் மருத்துவத்தை ஆராய முன்னரே மெய்ஞ்ஞான உலகம் மருத்துவத்தை இப்புவிக்குத் தந்துள்ளது. மூத்த மொழியாக விளங்கும் தமிழ் மொழி மெய்ஞ்ஞானிகளால் காலத்திற்குகாலம் மேன்மை பெற்றுள்ளது.

ஆன்மீக அற இலக்கியமாக விளங்குகின்ற திருக்குறள் தெய்வப்புலவர் வள்ளுவரால் படைக்கப்பட்டது. வள்ளுவர் தாம் படைத்த குறளில் வாழும் மனிதர்களுக்கான வாழ்வியற் கருத்துக்களை 1,330 குறள்களிலும் அழகுறத் தந்துள்ளார்.

நோயற்ற வாழ்வில் மனித வாழ்வு மேம்பட பொருட்பாலில் மருந்து என்ற அதிகாரத்தில் வள்ளுவர் மிக ஆழமாகக் கூறியுள்ளார். மருந்து என்ற அதிகாரத்தில் அமைந்துள்ள பத்துக் குறள்களிலும் இன்றைய மருத்துவத்துறையில், உளவியல் துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் கூறும் கருத்துக்களை அவர் அடக்கியுள்ளார்.

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக விளங்குகின்ற உணவு முறைப்படி அமையாவிட்டால் மனிதனுக்கு உடல் நோய் உண்டாகும். உணவு போதியளவு உண்ணாவிட்டாலும் நோய் உண்டாகும். எல்லை மீறி அளவுக்கதிகமாக உணவை உட்கொண்டாலும் அதனாலும் நோய் உண்டாகும். உணவு பற்றாவிட்டாலும் துன்பம்; அதிகம் உண்டாலும் துன்பம்.

இன்றைய சமுதாயத்தில் உள்ள நோய்களான சலரோகம், இரத்த அழுத்தம், இருதய நோய் போன்றன உணவு உட்கொள்வதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளால் ஏற்படுவதாக இன்றைய மருத்துவர்கள் கூறுகின்றனர். இதனால் நோய்கள் மனிதனைப் பற்றிக்கொள்வதாக இவர்கள் கூறுவது போலவே வள்ளுவரும் அன்றே கூறியுள்ளார்.

மனிதன் ஆற்றும் செயலும் அவனது நோய்க்குக் காரணமாகின்றது. அதிக அளவில் உடலை வருத்தி ஓய்வின்றித் தொழில் செய்பவன் நோய்களைச் சம்பாதிப்பான். உடலுக்கு ஒரு வேலையும் கொடுக்காமல் சும்மாயிருப்பவனும் நோயாளியாவான். மேற்குறித்த கருத்துக்களின் அடிப் படையில் வள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தின் முதற்குறளில்

''மிகினும் குறையினும் நோய்
செய்யும் நூலோர்
வழி முதலா எண்ணிய மூன்று''

எனக் கூறிப்பிடுகின்றார்.

அதாவது உணவும் செயலும் ஒருவனுக்கு மிகுந்தாலும், குறைந்தாலும் மருத்துவ நூலோர் எண்ணிய மூன்று நோயும் துன்பம் உண்டாக்கும் என்கிறார்.

இரண்டாவது குறளில் ஒருவன் உண்டஉணவு பூரணமாக சமிபாடு அடைகின்ற போது அவனுக்கு நோய் இல்லை. ஒருவனது உணவு சமிபாடடைவதற்கு உணவினுடைய தகுதியும், உட்கொண்டவனுடைய சரீரத்திற்கான கடமையும் சரியாக அமையுமேயானால் அவனுக்கு நோய்வர வாய்ப்புமில்லை. மருந்து உண்ண வேண்டிய தேவையுமில்லை.

முதலில் உண்ட உணவு சமிபாடடைய முன்பு மறுபடி உண்பதனால் நோய் விளையும். எனவே முன்பு உண்ட உணவு சமிபாடடைந்த பின்பே உண்ண வேண்டும் என்ற கருத்தினை இரண்டாவது குறளில் வள்ளுவர் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

''மருந்து என வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்''

ஒருவன் முன்னர் உண்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு ஞான பண்டித வித்தியாசாலைக்கு முன்பாக உள்ள 2½ பரப்பு வளவும், நாற்சார் கல்வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; செ. தம்பித்துரை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [58212]

### விற்பனைக்கு

வடககு - கிழககு மாகாண சபை கூட்டுறவு பரிசோதகரை நியமனம் செய்வதற்கான விண்ணப்பப் படிவம் வடமராட்சி 'கவிதா ரேடேர்ஸ்' பருத்தித்துறையில் கிடைக்கும். [சி/4500]

நல்ல நிலையில் உள்ள Fordcortina மோட்டார் கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல: 36, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். [58210]

25 ஸ்ரீ ஒன்பதாயிரம் தொடர் இலக்கம் கொண்ட 135 மொடல் டிராக்டரும், EL எண்ணாயிரம் தொடர் இலக்கம் கொண்ட சோமசெற் காரும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இந்துமகால், புகையிரத நிலைய வீதி, (ஆடியபாதம் வீதி) கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(58123)

### இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட்ஸ் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். (அரைக்கோழியும்பெறலாம்) 54/2, சந்தனமாதாகோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம். [58216]

Broiler இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [58218]

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அண்மையில்). (58183)

### MATHS ENGLISH

O/L பரீட்சையில Distinction, Credit பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து Paper Class வரை (ஆண்டு 9, 10 உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர்: 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [58221]

### மணமகள் தேவை

கௌரவமான குடும்பத்தில் உள்ள உத்தர நட்சத்திரமும், 2 இல் செவ்வாயும் உடைய கனடாவில் நிரந்தர வதிவிடம் உடைய 35 வயது பட்டதாரி மணமகனுக்கு கல்வி அறிவுள்ள அழகிய மணமகள் தேவை, மணமகன் லீவில் வந்துள்ளார். தொடர்பு கொள்ளும் முகவரி: செ. விஜயரத்தினம், முருகன் திருமணசேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். [58214]

### மணமகன் தேவை

இந்து உயர்குல குடும்பத்தைச் சேர்ந்த 39 வயது சுவாதி 2 ஆம் பாதம் 8 இல் செவ்வாய் உள்ள அரச நிரந்தர உத்தியோகத்திலுள்ள (மாதாந்த ஊதியம் 6000/-க்கு மேல்) மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரன் எதிர்பார்க்கின்றார். சீதனம் வழங்கப்படும். கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 768, C/O உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (58061)

### விண்ணப்பப் படிவம்

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கான அச்சிட்ட படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

(58201)

### SPOKEN ENGLISH

இலக்கணம் இன்றி சுலபமாக ஆங்கில மூலம் ஆங்கிலப்பயிற்சி. ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள்வீதி, சங்கானை, நிகரை வயிரவர்கோயில் முன்பாக. (58204)

### தேவை

நல்ல பாவிப்பில் உள்ள ஆங்கிலத் தட்டச்சு (Medium) இயந்திரமே Vespascooter (P X 125E) உம் தேவை. தொடர்பு:- வே. நடராசா, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். (58188)

### O/L கணிதம் 98

33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலயங்களில் சகல அலகுகளையும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினாவிடையும் Tute & P Timeing Practiceயும் அதிஉயர் விசேட தரத்திற்கு நிறைவேற்றப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

(58186)

## 2 சிப்பாய்கள் பிடிபட்டனர்

கொழும்பு, ஓக. 9

வவுனியா செட்டிகுளம் இராணுவ முகாமில் இருந்து துப்பாக்கியுடன் தப்பி ஓட முயன்ற இரு சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## வடிகால்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 9

மழை காலம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அடுத்து பருத்தித்துறை நகரசபை வடிகால்கள் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய பருத்தித்துறை, ஆத்தியடி, ஓடக்கரைப் பகுதிகளுக்கூடாக கடலைச் சென்றடையும் வெள்ள நீர் வடிகால் புனரமைப்பின் முதற் கட்ட நடவடிக்கையாக அப்பகுதிகளில் (வாய்க்கால் பகுதியில்) வளர்ந்திருக்கும் பற்றைகள், செடி கொடிகள், சிறிய மரங்களை வெட்டி துப்புரவு செய்யும் பணி நடைபெறுகின்றது. (ஐ-15)

## மாநகர நிர்வாகத்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

சூரிய தலைமையில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பில் எமது மக்களின் பிரச்சினைகள் பற்றி ஏனைய முதல்வர்களிடம் எடுத்துரைப்பேன்.

இந்தமுதல்வர்களை யாழ். வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளேன். அவர்கள் யாழ். வந்து இராணுவச் சூழலில் அடிப்படை வாழ்வு அற்றுப் போய்விட்ட மக்களின் நிலையை நேரில்அவதானிக்க வேண்டும்.

### ஜனாதிபதியுடன் சந்திப்பு

எதிர்வரும் 11ஆம் திகதி அனைத்து மாநகர முதல்வர்களும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கவுள்ளனர். அச்சந்திப்பில் நானும் கலந்து கொள்வேன்.

இச்சந்திப்பில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு ஜனாதிபதியை வலியுறுத்துவதுடன் இராணுவ முஸ்தீபை நிறுத்துமாறும் கேட்பேன். ★

# மீனவர்களின் 350 றோலர்கள் பயன்படுத்த முடியாமல் முடக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 9

ஆழ்கடல் மீன்பிடி தடை செய்யப்பட்டதால் குருநகர் கடற்றொழிலாளர்களுக்குச் சொந்தமான 350 றோலர்கள் பயன்படுத்த முடியாத நிலையிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் குருநகர் கடற்றொழிலாளர்களின் 90 கண்ணாடி இழைப் படகுகள் அழிக்கப்பட்டுள்ளதாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆழ்கடல் மீன் பிடிக்கு பயன்படுத்தி வந்த ஆயிரக் கணக்கான அறக் கொட்டியான் வலைகள் பயன்படுத்த முடியாமல் முடக்கி வைக்கப்பட்டிருப்பதால் பழுதடைந்து வருவதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்பொழுது பகல் நேரத்தில் மட்டும் முப்புரிவலை சிறகுவலைபோன்ற தொழில்களைச் செய்வதற்கு மட்டும் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என்றும் குருநகர் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (ஐ-5)

## வன்னியில் மோதல்

கொழும்பு, ஓக. 10

வன்னியில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் குஞ்சுக்குளம் மற்றும் புலுமைசின்னாசிக் குளம், ஓலுமடுப் பகுதிகளில் கடந்தவெள்ளியன்றுமோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

குஞ்சுக்குளத்தில் படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது 120 இற்கும் மேற்பட்ட நிலக் கண்ணிகள் மீட்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## நோய் வராமல் தடுக்கும் மருந்து....

(மூன்றாம் பக்கத் தொடர்)

உணவு சமித்ததை அறிந்து பின்பு உணவு உட் கொண்டால் அவன் உடம்பிற்கு மருந்து என்ற ஒன்று வேண்டாம் என்பதாகும்.

### அளவுப் பிரமாணம் அவசியம்

மூன்றாவது குறளில் மானுட உடம்பைப் பெற்ற மனிதன் ஆறறிவு படைத்தவன். எனவே ஆறறிவு படைத்தவன் தான் உண்ணுகின்ற உணவின் பிரமாணங்களை அறிந்து உண்ண வேண்டும். பிறவிகளிலே பகுத்தறிவு உடைய பிறவியாகிய மனிதன் உணவைஉட்கொள்ளும் ஒழுங்குகளை முறைப்படி பேணுவானேயானால் நெடுங்காலம் வாழலாம் எனக் குறிப்பிடுகிறார்.

ஐந்தாவது குறளில் உள்ளம் விரும்புகின்ற அளவில் உண்ணாமல் உடலின் எதிர்கால நன்மை குறித்த அளவில் ஒருவன் உண்டு வருவானேயானால் அவனுக்கு நோய் வருவதற்கு வாய்ப்பில்லை. அவன் நோயால் வருந்த வேண்டிய தேவையும் ஏற்படாது எனக் குறிப்பிடுகிறார்.

''மாறுபாடு இல்லாத உண்டி
மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு''—

அதாவது மாறுபாடில்லாத உணவை தன் உள்ளம் விரும்பிய அளவின்றி பிணிவராத அளவு ஒருவன் உண்டு வந்தால் அவன் உயிர்க்கு பிணிகளால் துன்பம் உண்டாகாது எனக் குறிப்பிடுகிறார்.

ஆறாவது குறளில் ஒருவர் தொடர்ந்து மகிழ்வாக வாழ வேண்டுமேயானால் நல்லன என்று அறிந்தவற்றை அதுவாக உண்டு வாழ வேண்டும். அளவு மீறி அவாவின் காரணமாக அதிகம் உண்போமேயானால்நித்தியவருத்தத்தினால் துன்புற நேரிடும் என்கிறார்.

குறிப்பாகவாதம், பித்தம், சன்னி, குடற்புண்கள் போன்ற நோய்கள் நித்திய வேதனை தருபவை. எனவே ஒருவனது வாழ்வில் உடல் ரீதியான இன்ப, துன்பங்களைத் தீர்மானிப்பது அவன் உண்ணும் உணவாகும் என்ற கருத்துப்பட பின்வருமாறு கூறுகிறார்.

''இழிவு அறிந்து உண்பான்
கண் இன்பம் போல்
நிற்கும் கழிபேர் இரையான்
கண் நோய்''

அதாவது குறைந்த அளவு நல்லது என்று அறிந்து உண்பவரிடத்திலே இன்பம் நீங்காது இருப்பது போல அளவு மீறி உண்பவரிடத்தே நோய் நீங்காது நிற்கும் என்கிறார்.

இக் குறளில் 'இரையான் கண் நோய்' என்ற அடியில் இரையான் என்ற சொல்லை வள்ளுவர் புகுத்தியதற்கு காரணம் உணவை அளவின்றி உண்டு அதனால் வருந்தும் விலங்குகள் போல அதிலிருந்து அளவு மீறி உண்டு நோயினால் வருந்துவோரை வள்ளுவர் விலங்குகளுக்கு ஒப்பிடுகிறார் என்று பொருள் விரித்துக் கருதுகின்றனர் அறிஞர்கள்.

ஏழாவது குறளில்வேண்டியளவு உணவை விடுத்து அளவுக்கு அதிகமாக கால ஒழுக்கில்லாமல் உண்பானாயின் அவனது உடலில் ஒரு நோய் தொடங்கிப் பல நோய் உருவாகின்ற வாய்ப்பு ஏற்படும் என விளக்குகின்றார். இன்றும் சாதாரண அல்சர் நோய் பின்னர் புற்று நோயாகுவதையும் அதனோடு தொடர்புடைய பல நோய்கள் உண்டாவதையும் காணலாம். இந்த நடைமுறையையே வள்ளுவர்

''தீ அளவு அன்றித்
தெரியான் பெரிது
உண்ணின் நோய் அளவு
இன்றிப்படும்''

எனக் குறிப்பிடுகிறார்.

### மருத்துவன் கடமை

எட்டாவது குறளில் வள்ளுவர் நோயைத் தீர்க்கும் மருத்துவனின் கடமையை விளக்குகிறார். மருத்துவன் ஒரு நோயாளிக்கு ஏற்பட்ட நோய் எத்தகையானது? இந் நோய் ஏற்படுவதற்குரிய மூல காரணம் என்ன? இந் நோயை நீக்குவதற்கு வழி என்ன? என்பதை மருத்துவன் பூரணமாக அறிந்து நோயிலிருந்து உடலைக் காக்க முனைய வேண்டும் என்கிறார்.

குறிப்பாக இன்றையமருத்துவ உலகிலே மருத்துவர் நோயாளியோடு சம்பாசனை செய்து நோய்க்குரியவனுடைய நோயின் மூல காரணத்தைக் கண்டு கொள்ள வேண்டும்.

மருத்துவனுக்கு இருக்க வேண்டிய அடிப்படை இலட்சணங்களை

''நோய் நாடிநோய் முதல்
நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்''

என்கிறார்.

அதாவது மருத்துவர் நோயையும் நோயின் மூல காரணத்தையும் அதனைத் தீர்க்கும் உபாயத்தையும் அறிந்து அதனை பிழைபடாமல் செய்ய வேண்டும். என்கிறார். மருத்துவனுக்கு நிதானமும், பொறுமையும் வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றார். ஒன்பதாவதுகுறளில் மருத்துவத்தைக் கற்ற மருத்துவன் நோயாளியின்நிலைமையினை அறிந்து அவனது பிணிகளை அறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டும் என்கிறார்.

நோயாளியானவன் நோயுடன் வருந்தும்போது நோயாளிக்கு ஆறுதல் வார்த்தை மிக முக்கியமானது. மருத்துவன் தருணமறிந்து நோயாளியோடு பேசுகின்ற பேச்சு மிகவும் பிரதானமானது. நோயிலிருப்பவர்களை எத்தனையோ உளத் தாக்கங்கள் பாதித்த வண்ணமிருக்கும். இவ் வேளையில் மருத்துவன் கூறும் சொற்கள் நோயாளிக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

உயிருக்கு அவஸ்தைப்படும் ஒருவரைப் பார்த்து அவரது உயிர் பிரிந்து விடும் என்பது அறிந்தாலும் கூட மருத்துவன் நோயாளிக்கு "நீ இறந்து விடுவாய்'' என்று சொல்வது பொருத்தமற்றது. எனவே மருத்துவத் துறையில் ஈடுபடும் கற்றவராகிய வைத்தியர் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையை

'' கூற்றான் எனவும் பிணி என
வும் காலமும்
கற்றான் கருதிச் செயல் ''

எனக் குறிப்பிடுகிறார்.

நோய் தீர்க்கும் மருத்துவத்தைக் கற்ற மருத்துவன் நோயாளியின் தன்மை, நோயின் அளவு, மருத்துவம் செய்வதற்கு ஏற்ற காலம் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றோடு பொருந்துவதாகச் செய்ய வேண்டும்.

பத்தாவது குறளில் நோயைத் தீர்க்கின்ற முயற்சியில் ஈடுபட வேண்டிய ஒழுங்கினைக் குறிப்பிடுகிறார். நோயைத் தீர்ப்பதற்கு முதலாவது மருந்து தேவை. மருந்தாகச் செயற்பட வேண்டியவர்கள் நோயுற்றவர்; அவர் நோயைத் தீர்ப்பதற்கான ஒத்துழைப்பினை மருத்துவருக்கு வழங்க வேண்டும். அதற்கடுத்து நோயாளிக்குரிய நோய் தீர்க்கும் ஔடதமாகிய மருந்து முறைப்படி கிடைக்க வேண்டும்.

இம்மூன்றும் அமைந்து விட்டால்கூட நோயாளியின் நோயை மாற்றி விட முடியாது. நோயுற்றவரைப் பராமரிக்கின்றவன் மருத்துவன் சொன்ன ஒழுங்கில் மருந்தை உரிய வேளையில் நோயாளியைக் கொண்டு உண்பித்தல் வேண்டும், எனவே நோய் மாறுவதற்கு மேற்குறித்த நான்கு பகுதியும் ஒத்தபடி அமைய வேண்டும் என்பதை மருந்து என்ற அதிகாரத்தின் நிறைவுக் குறளாக வைக்கிறார் வள்ளுவர்.

''உற்றவன் தீர்ப்பான் மருந்து
உழைச் செல்லான் என்று
அப்பால் தான் கூற்றே
மருந்து;'

இன்றைய விஞ்ஞான உலகில் மனிதனுக்கு வரும் நோய்களைத் தடுப்பதற்கு கூறப்படும் மருத்துவ ஆலோசனைகளை பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த வள்ளுவர் எவ்வளவு ஆழமாகச் சொல்லியுள்ளார் என்பதை அறிகின்ற போது தமிழர்களிடையே இந்த மெய்ஞ்ஞான மருந்து அறிவை இன்றைய அறிவியல் உலகம் மெச்சுமென்பதில் ஐயமில்லை.

(நன்றி: மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய பொன்விழாச் சிறப்பு மலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யா, தன்சானியாவில் பயங்கரம்!

# அமெரிக்கத் தூதரகங்கள் அருகே பெரும் வெடிகுண்டுத் தாக்குதல்கள்!

## 100 பேர் பலி! 1,500 பேர் படுகாயம்!!

நைரோபி, ஒகஸ்ட் 9

கிழக்கு ஆபிரிக்க நாடுகளான கென்யாவிலும், தன்சானியாவிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் அருகே நேற்று முன்தினம் சில நிமிடநேர இடைவெளியில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட பெரும் குண்டுத் தாக்குதல்களினால் பேரழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன, நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். சுமார் ஆயிரத்து 500 பேருக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது. கட்டடங்களும், வாகனங்களும் நாசமாகியுள்ளன.

## முதல் தாக்குதல் நைரோபியில்!

முதலாவது குண்டு வெடிப்பு கென்யாவின் தலைநகர் நைரோபியில் முற்பகல் 11 மணியளவில் நடந்தது.

நைரோபியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகே இருந்த கூட்டுறவு வங்கி மாடிக் கட்டடம் குண்டுத் தாக்குதலால் தகர்க்கப்பட்டு அருகே இருந்த தூதரகக் கட்டடத்தின் மீது வீழ்ந்தது.

வங்கி கட்டடத்துக்குள்ளும் அமெரிக்கத் தூதரகத்தினுள்ளும் அச்சமயம் தங்கியிருந்த நூற்றுக் கணக்கானோர் இடிபாடுகளிடையே சிக்கினர்.

இந்தக் கட்டடங்களுக்கு வெளியே வீதியில் விரைந்து கொண்டிருந்த வாகனங்களையும் குண்டுச் சிதறல்கள் துளைத்தெறிந்தன. இதனால் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் காயமடைந்தனர்.

தகர்த்தெறியப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகளிடையே சிக்கியோரை மீட்பதில் பாதசாரிகள் ஈடுபட்டனர். செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் நூற்றுக் கணக்கானோர் அகப்பட்ட வாகனங்களில் ஏற்றப்பட்டு ஆஸ்பத்திரிகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவசர மருத்துவ உதவி மற்றும் இரத்தம் கோரி வானொலி மூலமான அறிவிப்புகள் தொடர்ந்து விடுக்கப்பட்டன.

குண்டு வெடிப்புகள் ஏற்பட்டதும் வங்கிக் கட்டடம் தூள் தூளானது. அமெரிக்கத் தூதரகத்தை தீப்பிளம்புகள் சூழ்ந்து கொண்டன. உள்ளே தங்கியிருந்த அமெரிக்கத் தூதர் சிறுகாயங்களுக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அப்பகுதியை உடனடியாக படையினர் சுற்றி வளைத்துக் கொண்டனர். இடிபாடுகளிடையே இருந்து சடலங்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன. பலர் காணாமற் போயுள்ளனர்.

நைரோபி நகரம் ஸ்தம்பித்துப்போயுள்ளது. இத்தாக்குதல் குண்டு வெடிப்பினால் ஏற்படுத்தப்பட்டது என்பது உறுதி செய்யப்பட்டபோதிலும் அது எவ்வாறு நடத்தப்பட்டது என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

நைரோபி தாக்குதல் நடைபெற்ற சில நிமிட இடைவெளியில் தன்சானிய தலைநகர் டார் எஸ் சலாம் (DAR ES – SALAAM) நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அருகே இரண்டாவது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலால் பாரிய அளவில் சேதம் ஏற்படவில்லை.

கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டே இங்கு வெடித்தது. இதில் 9 பேர் பலியாகினர். அமெரிக்க தூதரகத்துக்கு அருகே இருந்த பிரான்ஸ், ஜேர்மன் தூதரகங்களுக்கும் இதனால் சேதம் ஏற்பட்டது. (ஐ)

## கிளின்ரன் அதிர்ச்சி

வாஷிங்டன், ஒக. 9

குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட பேரழிவுகள் குறித்து அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

இக்குண்டுத் தாக்குதல்களை பயங்கரவாதிகளின் கைவரிசை என வர்ணித்துள்ள அவர் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வாஷிங்டனிடம் உள்ள எல்லா வசதிகளும், வழிவகைகளும் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

''இரு தாக்குதல்களும் அருவருக்கத் தக்கவை; மனிதத்தன்மை அற்றவை; எத்தனைகாலம் சென்றாலும் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்போம்'' என்று சூளுரைத்தார் கிளின்ரன். (ஐ)

## வாஷிங்டனில் இருந்து:

## ராணுவ, புலனாய்வு குழுக்கள் விரைவு!

வாஷிங்டன், ஒக. 9

நைரோபி, டார் எஸ் சலாம் நகரங்களில் நடந்த குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க அமெரிக்காவின் இராணுவ, புலனாய்வு நிபுணர்கள் அடங்கிய குழுவினர் விமானப்படை விமானங்கள் மூலம் ஆபிரிக்கா விரைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அவசர மருத்துவ உதவிப் பொருள்களுடன் மருத்துவக் குழுக்களும் உடன் சென்றுள்ளன.

சமஷ்டி புலனாய்வு நிபுணர்களும், கடற்படை நிபுணர்களும் ஏற்கனவே நைரோபி சென்றுவிட்டனர். (ஐ)

# காவிரி நதி நீர்ப் பங்கீடு நெருக்கடி; மாநிலங்களிடையே உடன்பாடு!

பெங்களூர், ஒக. 10

இந்தியாவில் ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக நீடித்து வந்த காவிரி நதி நீரைப் பங்கிடுவது தொடர்பான பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களிடையே பொது உடன்பாடு ஒன்று எட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற முதலமைச்சர்களின் இரண்டு நாள் பேச்சுவார்த்தைகளின் முடிவில் இந்த உடன்பாடு எட்டப்பட்டிருக்கிறது.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, கர்நாடக முதல்வர் ஜே. எச். பட்டேல் ஆகியோர் இந்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

7 ஆண்டுகளுக்கு முன்னர் நடுவர் மன்றம் வழங்கிய இடைக்கால ஆணையை அமுல்படுத்தாமல் இழுத்தடித்து வந்த கர்நாடக மாநில அரசு தற்போது அதனை ஏற்றுக்கொள்ள இணங்கியுள்ளது.

நீதிமன்ற இடைக்காலத் தீர்ப்பை அமுல் செய்வதைக் கண்காணிப்பதற்காக ஆணைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்குழுவில் தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். குழுவுக்கு பிரதமர் வாஜ்பாய் தலைவராக இருப்பார். (ஐ)

## அயூப்கான் நீக்கம்

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தமது அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்துள்ளார்.

[illegible] அயூப்கான் அப் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார். (ஐ)

## இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஒக. 9

நைரோபி, டார் எஸ் சலாம் குண்டுத் தாக்குதல்களை இந்தியா கண்டித்துள்ளது.

இந்தியப் பிரஜைகள் பலர் நைரோபியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் மற்றும் சில நாடுகளின் தலைவர்களும் இத் தாக்குதல்களைக் கண்டனம் செய்துள்ளனர். (ஐ)

## உலக அரங்கில்

## தூதரக பாதுகாப்பு அதிகரிப்பு

வாஷிங்டன், ஒக. 9

குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஆபிரிக்க நாடுகளிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## 5 நாள்கள் துக்கம்

நைரோபி, ஒக. 9

நைரோபி குண்டுத் தாக்குதலில் பலியானோருக்காக 5 நாள்கள் துக்கம் அனுஷ்டிக்குமாறு கென்யா அரசு அறிவித்துள்ளது.

நன்கு திட்டமிடப்பட்ட இத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் அமெரிக்காவுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் கென்யா தெரிவித்துள்ளது. (ஐ).


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
நி. கவிதாவின் தந்தை

**பொ. நித்தியானந்தன்**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

கலைப்பீட 2 ஆம் வருட 'B' பிரிவு
மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.

(58199)



## கண்ணீர் அஞ்சலி

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், தட்டாதெரு நித்தியலட்சுமி மரக்காலை முகாமையாளரும், பல்கலை வேந்தருமாக விளங்கிய அன்பு நண்பர்

**அமரர் இ. இராசேந்திரம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்துக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

V. T. R. சிங்கம்ஸ்
வே. இரத்தினசிங்கம் (குடும்பத்தினர்)

7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(58117)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 — 06 — 1934

உதிர்வு 20 — 08 — 1997

அமரர்

**சின்னத்தம்பி சின்னையா**

( இராசையா )
(முன்னாள் தபாலதிபர்)
( Radio Officer, Foreign Ship )

நாம் உயர உயரமாய் நின்றீரே
அன்பின் திருவுருவமாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் இருப்பிடமாய், குடும்பத்தின்
ஒளி விளக்காய்
இருந்து மறைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றிடினும் மறைந்திடுமோ நின்
மலர்ந்த முகம். உங்கள் ஆத்மா சாந்தியடைய
கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

மீசாலை வடக்கு,
வேம்பிராய்.

(58174)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

புகழ்பூத்த ஸ்கந்தாவின் முன்னாள் அதிபர்
அமரர் வி. சிவசுப்பிரமணியம் J. P.
அவர்களின் மைந்தனும்
ஸ்கந்தாவின் பழைய மாணவனுமாகிய

**திரு. வி. சி. சிவரத்தினம்**
அவர்கள்
( விலை மதிப்பீட்டு உத்தியோகத்தர் )
அகில இலங்கை சமாதான நீதிவானாக
நியமிக்கப்பட்டமை அறிந்து வாழ்த்துகின்றோம்.

சுன்னாகம் வாழ்
நண்பர்கள்.

[58181]

## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

**லூமும்பா பல்கலைக்கழகம்**

போன்ற பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களில் நீங்கள் விரும்பிய எல்லாத்துறைகளுக்கும் அனுமதி பெற்றுத்தரப்படும். கட்டணம் எதுவுமில்லை.

1. மருத்துவம் (ஆங்கிலம்)
2. பொறியியல் (ஆங்கிலம்)
3. ஏனைய துறைகள்

விண்ணப்ப முடிவு திகதி: 30-08-98

Dr. க. சிவனடியான்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(58173)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**பரமானந்தம் அஷாந்**

அன்னைமடியில் 12 – 10 – 1996
ஆண்டவன்மடியில் 10 – 07 – 1998

அருமை அஷாந் – உன்
பெருமை பேச நாவெடுத்தோம்
வெறுமையாக்கி விட்டாய் எம்மை

பதினெட்டு திங்கள்தான் எம்
பாசத்தில் திளைத்தாய்— ஐயா— உன்
பால் வெண்ணச் சிரிப்பின்— திரு
மால் வண்ணம் கண்டோம்.

அஷாந், அஷாந் என்று அழைத்த போது—நீ
சிரித்த சிரிப்பு இன்னும் எம்முன் நிழலாடுகிறதே
வருவாய் வளர்வாய் என்று நினைந்த மனம்—
இன்று
பிரிவை நினைத்து பிரார்த்திக்கின்றதே.

அன்னாரின் பிரிவையிட்டு எங்கள் துக்கத்தின் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திப்போமாக!

அப்பா, அம்மா,
திபி அக்கா, சோபியக்கா,
நிஷாந் அண்ணா.

வீடியோ ஆனந்த் ஸ்ருடியோ,
யாழ். வீதி,
மானிப்பாய்.

(58206)

## தென்மராட்சியில் நாய்களுக்கு தடுப்பூசி

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நாய்களுக்கு ஏற்றப்படும் விசர்நோய் தடுப்பூசி மருந்து வந்துள்ளது.

பின்வரும் திகதிகளில் பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும்—

அந்தந்தப் பகுதி மக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளலாமெனவும் பணிமனைப் பொறுப்பதிகாரி து. கிளிண்டஸ் அறிவித்துள்ளார்.

★ ஓகஸ்ட் 10— மந்துவில் சனசமூக நிலையம்.
★ ஓகஸ்ட் 11— மீசாலை மதுவன் சனசமூக நிலையம்.
★ ஓகஸ்ட் 18— சாவகச்சேரி உதயசூரியன் சனசமூக நிலையம்.
★ ஓகஸ்ட் 24— சரசாலை சனசமூக நிலையம்.
★ ஓகஸ்ட் 25— புலோப்பளை சனசமூக நிலையம்.

(ஐ-117)

## வங்கி கருமபீடம்

யாழ்ப்பாணம், ஓக. 9

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளையினர் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் உற்சவ கால கருமபீடம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளனர்.

'ரிதீரேகா' (பரிசுதிய) சேமிப்புச் சான்றிதழ்களை இலகுவில் கொள்வனவு செய்வதற்கு வசதியாகவே இக் கரும பீடம் நல்லூர் இந்து விடுதிக்கு முன்பாக திறக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ். சிவப்பிரகாசம் வீதியில் உள்ள காளிகோயிலடி ஞானக்குழந்தை இல்லத்தின் ஆறாவது ஆண்டு பாலர் விளையாட்டுவிழா நாளை ஞாயிறு பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை ஆசிரியை செல்வி. உஷாதேவி வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி கமலநாதன் பரிசில்களை வழங்குவார்.

(ஐ-7)

## தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம், ஓக.9

நல்லூர் உற்சவகாலத்தை பொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 5.30 மணி முதல் 7 மணிவரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஞானகுமாரி சிவனேசனின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

(ஐ-8-30)


**ஆங்கிலம்**
தபால் மூலம்

தொழில் புரிவோர், தேடுவோர், மாணவர் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் பயிற்றப்படுகிறது. முத்திரை, சுய விலாசமிட்ட உறையுடன் எழுதவும்.

**LAMPS Ltd.,**
76, Mahaveethiya,
( grand street ), Negombo.
( 58122 )


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 20-03-1920



இறப்பு 10-07-1998

**நாகமுத்து நகுலம்மா**

பௌர்ணமியிற்றான் முழுநிலவு
நின் முகத்திலோ தினமும் முழுநிலவு
குழந்தையிலே மழலை நின்
வாழ்க்கையில் நித்தமும் மழலை
இனி யாரிடம் காண்போம் இதனை?

கறுப்பும் வெள்ளையும் — இரவும் பகலும் இயற்கை
இன்பமும்-துன்பமும், பூ மலர்வதும் வாடுவதும்
இயற்கை
படைப்பதும் - பறிப்பதும் அவன் செயலே
நீர் மட்டும் இதற்கென்ன விதிவிலக்கா!!

நின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.


பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(58189)

## ஈராண்டு நினைவுகள்

மலர்வு 31 — 10 — 1943



உதிர்வு 01 — 08 — 1996

அமரர்

**விசுவர் குமாரசாமி**

(ஓய்வு பெற்ற தட்டெழுத்தாளர், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்)

ஓடிவிட்டன ஈராண்டுகள்
ஓய முடியாமல் தவிக்கின்றோம்
உங்கள் நினைவுகளால் – நாம்
உங்கள் பாதச் சுவடுகளில்
பாதை தேடி மிகுதி நாள்களை
பாரினில் நகர்த்த முயல்கின்றோம்.


- குடும்பத்தினர்

மூளாய் மேற்கு,
சுழிபுரம்

(கி4501)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 19 — 10 — 1976



பாபாவின் பாதத்தில் 21 — 07 — 1997

செல்வன்

**பத்மநாதன் முரளிக்குமார்**

திதி: 09 - 08 - 98 ஞாயிறு

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மாதா, பிதா, குரு, தெய்வமும் பாபாவே என
அவர்தம்
பாதத்தைச் சரணடைந்த எமது அன்புக்
குமாரனின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாயிராம்!

அப்பா, அம்மா,
அக்கா, அண்ணா,
உறவினர்கள்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(58175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்

### இவ்வாறு தான் தொடருமோ...?

யாழ்ப்பாணக் குடாநாடு இப்போது அரசாங்கத்தின் ஆணை செல்லுபடியாகும் பிரதேசமாகி உள்ளது. யாழ்.மாவட்டத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் அரசாங்கப் பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டுள்ளனர். அரசின் சிவில்நிர்வாகமும் இயங்குகிறது.

இத்தகைய ஒரு பிரதேசத்தில், மக்கள் மீளக் குடியமர்ந்து இரண்டரை வருடங்களாகின்றன. ஆனால் பல பகுதிகளில் மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியிருக்க முடியவில்லை.

குடாநாட்டின்சகல திக்குகளிலும் மக்கள் சென்று குடியிருக்க முடியாதவாறு மிதிவெடி, கண்ணிவெடி ஆகிய வெடிப்பொருள்கள் மக்களின் உயிருக்கும், உடலுக்கும் எச்சரிக்கை விடுத்த வண்ணம்மறைந்து கிடக்கின்றன.

யாழ்ப்பாண நகரத்தில்—யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்—தாம்வசித்த வீட்டில் புதையுண்டு கிடந்த மிதிவெடிக்கு நேற்று முன்தினமும் ஒரு பெண் இலக்கானார்; காலை இழந்து ஊனமுற்றார் என்றால் நிலைமை எவ்வளவு பயங்கரமானது என்பதனை சற்று நினைத்துப் பாருங்கள்.

இந்தப் பயங்கரத்தை அரசாங்கம் உணர மறுக்கின்றது. குடாநாட்டின் எட்டுத் திசைகளிலும், மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் அவற்றை அண்டியும் பல்லாயிரக்கணக்கான கண்ணிவெடிகள், மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றை அகற்றி மக்களைக் காப்பாற்றுவதற்கு ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் முன் வந்தது.

ஆனால், அந்த அமைப்பைச் சேர்ந்த அனுபவம் மிகுந்த நிபுணர்களின் தேவைக்கான தொலைத்தொடர்பு மற்றும் சாதனங்களை யாழ்ப்பாணம் கொண்டுவர பாதுகாப்பு அமைச்சு — அரசு — அனுமதி மறுத்து வருகிறது.

சம்பந்தப்பட்ட சாதனங்களை படையினரின் பாதுகாப்பில் வைத்து இயக்குவதற்கும் ஐ. நா. அமைப்பு இணங்கியும் படையினரின் அனுமதி கிடைக்கவில்லை. புண்ணுக்கு வலியா, மருந்துக்கு வலியா என்ற நிலையில் கண்ணிவெடிகளை அகற்றும் திட்டம்கைவிடப் படும் அபாயம் தோன்றியுள்ளது!

''பாதுகாப்புக் காரணம்'' என்ற 'லைசென்ஸ்' முத்திரையுடன் தமிழர்கள் மாக்களாக நடத்தப்படுவது சர்வசாதாரணமாகி விட்டது. அதே வரிசையில் கண்ணிவெடிகளை அகற்றுதலுக்கும் தடங்கல் இட்டு குடாநாட்டுத் தமிழர்களை ஆயிரக்கணக்கில் அழிக்கவும், ஊனமாக்கவும் அரசு 'திடசங்கற்பம்' பூண்டுவிட்டதா?

தமிழ் மக்களைப் பாதுகாப்பதிலும், அவர்களின் உரிமைகளை வழங்குவதிலும் அரசுக்கு உள்ள அக்கறையும் உணர்வும் இது தானா? அரசின் பதிலை தமிழ் மக்களும், அனைத்துலகினரும் உடன் எதிர்பார்க்கின்றனர். தமிழர் இன அழிப்பு இவ்வாறு தான் தொடருமோ என்பதற்குப் பதில் வேண்டும்.

# வழிபாடும் வாழ்வும் ஒன்றானால் அமைதியும் சமாதானமும் மலரும்

இப்போது ஆலயங்கள் தோறும் விழாக்கள் நடைபெறுகின்றன. மக்கள் கூட்டம் அலை அலையாக தம் எதிர்பார்ப்புகளை வேண்டுதலாக்கி, நேர்த்தியாக்கி, காணிக்கையாக்கி, விரதங்களாக்கி இறைவனோடு உறவாட கூடிஇறை சந்நிதியை நிறைக்கின்றது.

புறத்தோற்றத்தில்யாவரும் ஆடை அலங்காரமும் அழகுப் பொம்மையுமாக ஆலயத்தை நிறைத்தபோதும் அகத்தில் உள்ள பாரச் சுமைகளே அதிகம் அதிகம். வசதிக்கு, வாழ்க்கைக்கு ஏற்ப வேண்டுதலும் எதிர்பார்ப்புகளும் உள்ளன. மனிதரிடம் பெறமுடியாத அமைதியை, நிம்மதியை சமாதானத்தை வேண்டுகின்றனர். மனம் விட்டு நம்பிக்கையுடன் கேட்கும் வரங்கள் யாவும் கிடைத்திட கூடி உள்ளோர் எல்லாம் உள்ளத்தால் உருகிஉதட்டால் பிரார்த்திப்பது வழக்கமாகிவிட்டது.

ஆலயத்துள்ளேசென்றதும் உள்ள அமைதியையும், நிம்மதியையும் ஏன் எமது அயலிலும், சூழலிலும், குடும்பத்திலும், நாட்டிலும் பெறமுடிவதில்லை. இதனை எம்மை நாமே கேட்டுக்கொண்டால் மற்றவர் தான் எமது அமைதிக்கு நிம்மதிக்கு இடையூறாய் உள்ளனர் என்றே சுட்டிமற்றவர்மேல் பழியைப் போட்டு தப்பித்துக்கொள்கின்றோம். ஏன் மற்றவரின்

**ஞாயிறு நற்பிரசாதம்**

அமைதிக்கும், நிம்மதிக்கும் நாம் கருவியாக இருக்கக் கூடாது, முயலக்கூடாது என கேட்போமானால், செயல்படுவோமானால், உணர்வோமானால் எமது சூழலிலும், குடும்பத்திலும், நாட்டிலும் அந்த அமைதியை, நிம்மதியைக் காணமுடியும்.

ஆலயத்தில் ஒன்றும் புறத்தில் வேறு ஒன்றுமான முரண்பட்ட வழிபாடும் வாழ்வுமே அமைதியற்ற, சமாதானமற்ற, நிம்மதி அற்ற வாழ்வுக்குகாரணமாகி விடுகிறது என்பதை உணர்ந்து கொண்டோமானால் புனித பிரான்சிஸ் அசிசியார் வேண்டியது போல—

இறைவா உன் சாந்தியின் கருவியாக என்னை ஆக்கியருளும், எங்கு பகை உள்ளதோ அங்கு அன்பையும், எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும், எங்கு ஐயமுள்ளதோ அங்கு நம்பிக்கையையும், எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும், எங்கு துன்பமுள்ளதோ அங்கு இன்பத்தையும் யான் பரப்பிட அருள் தாரும்.

''நான் என் ஆறுதலுக்காக அலைவதை விட்டு, ஆறுதலைக் கொடுக்க விழைவேனாக; என்னை மற்றோர் புரிந்து கொள்ள வேண்டுமென்றுதுடிப்பதை விடுத்து, ஏனையோரைப் புரிந்து கொள்ள யான் விளைவேனாக. என்னை மற்றவர் நேசிக்கவேண்டுமென்று தவிப்பதை விடுத்து, மற்றவர்களை நேசிக்க முற்படுவேனாக. ஏனெனில், கொடுப்பதன் மூலம் தான் பெற்றுக் கொள்ளமுடியும்;

**யோசப்பாலா**

மன்னிப்பதன் மூலம் தான் மன்னிப்படைய முடியும்; மடிவதன் மூலம் தான் முடிவில்லா வாழ்விற்குள் பிறக்க முடியும்''— என்ற பொருள் பொதிந்த வேண்டுதல் எம் வாழ்வாக வேண்டும்.

வழிபாடும் வாழ்வும் ஒன்றாகும் போது நாம் தேடும் அமைதியும் நிம்மதியும் சமாதானமும்எம் வாழ்விலும் எம் நாட்டிலும் மலரும்.

### கடலில் மூழ்கி கண்முன்னே பலியானார்:

# தலைமயிரை தடியுடன் கட்டி வைத்து அக்காவின் சடலத்தை பாதுகாத்தேன்

## சகோதரி விவரிப்பு

நெல்லியடிச் செய்தியாளர்: இ. கிருபாகரசூரியர்

நெல்லியடி, ஓக. 9

''கடலில் என்முன்பாகவே உயிருக்குப் போராடி மரணமான எனது அக்காவின் தலைமயிரைப் பிடித்து கடலில் நாட்டப்பட்டிருந்த தடி ஒன்றில் இறுக்கிக் கட்டி விட்டு குளறி அழுதேன். அப்பொழுது என்னுடன் கூடவந்தவர்களில் மேலும் மூவர் கடல் அலைகளினால் அள்ளிச் செல்லப்படுவதையும் கண்டேன்.''

கடந்த மாதம் 25ஆம் திகதி யாழ். குருநகர் குடாக்கடலில் பயணம் செய்த சமயம் பல மணிநேரம் நீரில் மூழ்கி தப்பிவந்தவரான கம்பர் மலை வன்னிச்சி அம்மன் கோவிலடி பாரதி வீதியைச் சேர்ந்த செல்வி அருணகிரி ராஜா நளாயினி (வயது 27) இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

மனம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் பதற்றத்துடன் காணப்பட்ட அவர் தமது அனுபவத்தைப் பின்வருமாறு விவரித்துள்ளார்.

எமது தனிப்பட்ட விடயம் காரணமாக சில மாதங்களுக்கு முன்னர் நானும் எனது அக்காவும் 'அன்ரி' யுமாக கொழும்பு சென்றோம். அங்கு எமது அலுவல்கள் யாவும் முடிவடைந்தமையால் மீண்டும் ஊருக்கு வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொழும்பிலிருந்து திருமலைக்கு வந்து அங்கு தங்கியிருந்து கப்பல் மூலம் பயணத்தைத் தொடர எண்ணினோம். எதிர்பாராவிதமாக கப்பல் சேவை இல்லாமையால் திருமலையிலிருந்து நாம் மூவரும் வவுனியா ஊடாக மன்னாரைச் சென்றடைந்தோம்.

அங்கு எம்மைப் போல் நூற்றுக்கணக்கான பயணிகள் யாழ்ப்பாணம் செல்வதற்கு நாச்சிக்குடாவில் தங்கி நின்றார்கள். என்னிடம் பணம் இருந்தமையால் அப் பணத்தை பாதுகாப்பாக வீட்டுக்குக் கொண்டு செல்லும் பாரிய பொறுப்புக்கும் நான் ஆளாகினேன்.

இதனால், எம் மூவருடனும் மேலும் சில பயணிகளும் சேர்ந்து மொத்தம் 13பேர்கள் 25-7-98ஆம் திகதி அதிகாலை படகு ஒன்றில் பயணத்தைத் தொடர்ந்தோம். அப்படகு யாழ். குடாக்கடல் பரப்பில் கற்பிட்டி என்ற இடம் வரைக்குமே சேவை புரிந்தது.

நாம் இறக்கிவிடப்பட்ட கடற்பரப்பிலிருந்து குருநகர் சற்று தொலைவிலிருந்தமையால் நானும், எனது சகோதரியான இந்துமதி (வயது 30) அன்ரி உட்பட, 19 வயதுடைய நெல்லியடியைச் சேர்ந்த மாணவன், வேறொரு வயோதிப மாது உட்பட எட்டுப் பேரும் அக்கடலில்நடந்து வந்துகொண்டிருந்தோம். கொளுத்தும் வெயில் எம்மை ஒரு புறம் துன்பப்படுத்திய போதும், நான் எம்முடன் கொண்டு வந்த பொதிகளைத் தலையில் சுமந்தபடியும், ஒரு கையை எனது அக்காவின் கையுடன் கோர்த்து கடலில் சென்று கொண்டிருந்தேன்.

நாம் கடலில் அடியெடுத்து வைக்கும் போது கடல் நீரின் மட்டமும் அதிகரித்துச் செல்வதை எம்மால் உணர முடிந்தது.

### வெள்ளைப் பாவாடையை காட்டினோம்

இதனால் அச்சமடைந்த நாம் வெள்ளைத்துணி (பாவாடை) ஒன்றை உயர்த்தி எமது கண்ணுக்குத் தென்பட்ட குருநகர் ஐந்து மாடிக் கட்டடத்தில் நின்ற இராணுவத்தினருக்கு சைகை காட்டினோம். ஆபத்துக்கு உதவுவார்களென்று நம்பிய எமக்கு, அவர்கள் திரும்பிச் செல்லுமாறு சைகை காட்டினார்கள். பெரும் களைப்புற்ற நிலையில் சென்ற நாம் மீண்டும் ஏமாற்றமடைந்த நிலையில், வந்த வழியே செல்ல எத்தனித்தோம்.

எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ள இயற்கை கூட சிலவேளைகளில் எதிரியாகி உயிர்

(9 ஆம் பக்கம் பார்க்க )

## நாடிடு நெஞ்சே!

நல்லையில் அமர்ந்த சண்முகநாதன்
நிதம் உனைக் காப்பான் நாடிடு நெஞ்சே!
தொல்லைகள் தீர்ப்பான்! சூரனை வதைத்துத்
தேவரைக் காத்த வடிவேல் அழகன்
எல்லையே அற்ற கருணைக் கடலாம்!
எழில் வேற் குமரன் இணையிலாத் துணையாம்!
இல்லைத் துயரம் இனியென உணர்வாய்!
இறையவன் பத மலர் என்றும் நினைந்தே!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## திறன்காட்டி ஆளாயோ!

நண்ணுவார் நலம் பேணும் நல்லூரான் திருவடியை
எண்ணியே தினம் வாழும் எம் மக்கள் நிதம்சொரியும்
கண்ணீரைக் களைந்தெறிய கைவேலைத்
தாங்கு முந்தன்
திண்ணரிய அருளாட்சித் திறன் காட்டி ஆளாயோ!

- மு. க. சிவானந்தம்



## பாராயோ! கவலையெல்லாம் தீராயோ!

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் — நல்ல மயில்
ஏறி வந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.
தேரடியில் சென்று தரிசித்தால் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை — நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாரீரோ
நாட்டீரே கேளீர் நலம்.
பாராயோ வென்னை நீ பார்த்துக் கவலையெலாந்
தீராயோ செய்ய திருவேலா — வாராயோ
[illegible]
[illegible]

— யோகர் சுவாமிகள்

### உதயவாக்கு

தனிமையை நாடுபவன் சிந்திக்கும் கலையைப் பயிலுதல் வேண்டும்.

ஆபிரகாம் லிங்கன்

## நாளை

ஆடி - 25
திங்கட்கிழமை
திதி: திருதியை
பின்னிரவு03.19 வரை.
நட்சத்திரம்: சதயம்
முற்பகல் 10.31வரை.
சுபநேரம்: 12.04 - 01.34
ராகுகாலம்: 07.34 -09.04
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் 68 ஆண்டுகளுக்கு முன்னரே

# ஒலித்த பாகவதர் தம்பிமுத்துவின் குரல்

## அவர் சிறந்த கவிஞரும் நடிகருமாவார்

அச்சுவேலிப் பாகவதர் அமெரிக்காவில் பாடினார்; இன்றல்ல, இற்றைக்கு 68 ஆண்டுகளுக்கு முன்னர். இசைத்தட்டில் பாடல்களைப் பதிவு செய்த முதலாவது இலங்கையரும் இவரே.

பாகவதர் ஆ. க. தம்பிமுத்து 1898ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி அச்சுவேலி தெற்கில் பிறந்தார்.

கொழும்பு "கொறன்" நிறுவனத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவேளை 1929 ஆம் ஆண்டு கொலம்பியாக் கொம்பனி கொழும்பு நகரில் இசைத்தட்டுக்களைத் தயாரித்து, உலக நாடுகளுக்கு விற்பனை செய்து கொண்டிருந்தது. தம்பிமுத்துப் பாகவதரின் இசையாற்றலையும் குரல் வளத்தையுமறிந்த கொலம்பியாக் கொம்பனி இவரது பாடல்களை இசைத்தட்டில் வெளியிட்டது.

கொழும்பு சென். பெனடிக்ற்கல்லூரியில்பாகவதரின் ஆறு பாடல்கள் மூன்று இசைத்தட்டுக்களில் அன்று பதிவு செய்யப்பட்டன. இசைத்தட்டு மூலம் வெளியான பாடல்கள் உலக நாடுகள் பலவற்றில் காற்றலையில் கலந்தன; அமெரிக்காவிலும் ஒலித்தன.

காயாத கானகத்தே, ஒருமையுடன் காந்தீயப் பாடல், புத்தபிரான் பாடல், தாயுமானவர் பாடல், வடிவேல் முருகா ஆகிய ஆறு பாடல்கள் இசைத்தட்டுக்களில் பதிவாகின.

சேர். அன்றூ கல்டிகொற் இலங்கைத் தேசாதிபதியாக வந்த வேளையில் இலங்கை வானொலியில் வரவேற்புக் கீதம் பாடியவரும் இவரே.

சிறந்த பாடகராக, புகழ் பெற்ற நடிகராக, கவிஞராக சோதிட விற்பன்னராக விளங்கியவர் ஆ. க. தம்பிமுத்துப் பாகவதர்.

### சிறந்த நடிகர்

இந்திய நாடகக் குழுக்கள் இலங்கையில் முகாமிட்டிருந்து நாடகங்களை மேடையேற்றிய காலப்பகுதியில் ஈழத் தமிழ் நடிகர்கள் இந்திய நடிகர்களுக்குக் குறைந்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்து முத்திரை பதித்தவர். பெண் பாத்திரங்கள் பலவற்றை ஏற்று நடித்துப் பாராட்டைப் பெற்றவர்.

அக்காலப்பகுதி நாடகங்களில் தம்பிமுத்து பாகவத



ரின் பாடல்களுக்கு தனிமதிப்பும் பாராட்டும் இருக்கும். அவரின் பாடல்களை மீண்டும் கேட்பதற்கு சபையிலிருந்து கோரிக்கைகள் எழும்.

முப்பதுக்கும் மேற்பட்ட புராண இதிகாச சமூக நாடகங்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்த பாகவதரின் நடிப்புக்கு பவளக் கொடி, அரிச்சந்திரா, பாதுகாபட்டாபிஷேகம், காளிதாசன், மனோகரன் தாய்மை, குலோபகாவலி, கிருஷ்ண-அருச்சுனன், அம்பிகாபதி அமராவதி, ஞான சௌந்தரி, வள்ளிதிருமணம்,

**உதயன் கலைச்சுடர்**

அல்லி அருச்சுனா, பதிசக்தி என்பன சான்றாகும்.

கலையரசு சொர்ணலிங்கம், பபூன் செல்லையா போன்ற தலைசிறந்த நடிகர் குழாத்தில் இடம் பெற்றிருந்த தம்பிமுத்து பாகவதர் குறித்து சமகால, எதிர்காலச் சந்ததியினர் அறிய வேண்டும். இந்து சாதனம் பத்திரிகை ஆசிரியர் நமசிவப்பிரகாசம், பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோரின் நண்பராக விளங்கியவர்.

மதுரையில் தங்கியிருந்து மீனாட்சி அம்மன் சமேத சொக்கநாத சுவாமி மேல் 1,340 கீர்தனைகளைப் பாடினார். 64 தினங்கள் விரதமிருந்து 64 திருவிளையாடல்களையும் வியந்து பாடிய 1,340 கீர்தனைகளின் சிறப்பைத் தமிழ் நாட்டுப்புலவர்கள் வியந்து பாராட்டினர். இதற்காக மதுரை மீனாட்சி அம்மன் வடக்கு வாசல் திருவள்ளுவர் கழகம் பராட்டிக் கௌரவித்தது.

பாரம்பரிய கலைகள் பாதுகாக்கப்படும் அதே வேளையில் பழம்பெரும் தமிழ் கலைஞர்களின் வரலாற்றையும் சம கால எதிர்காலச்சந்ததி அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படுவது அவசியம்.

**ஞானஆதவன்**

தமபிமுத்து பாகவதரின் நூறாவது பிறந்த நாள் நிறைவு கடந்த ஜூலை மாதம் பதினைந்தாம் திகதியாகும். அவர் இறந்து இம் மாதம் 30ஆம் திகதி 21 வருடங்கள் ஆகின்றன.

★

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

# வெளிநாட்டுத் திருமணச் சந்தைக்கு

# ஏற்றுமதி செய்யப்படும்யாழ்.பெண்கள்

## மாற்றியமைக்கப் புரட்சி செய்யுங்கள்

அன்புள்ள மகளுக்கு

உனது நீண்ட மடலை வாசித்தேன். அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலங்கள் போல் வார்த்தைகளைக் கொட்டி இருக்கிறாய். உனது துடிப்பினையும், கோபத்தையும், நீ கொதிக்கும் கொதிப்பினையும் என்னால் உணரமுடிகின்றது. என்ன செய்வது? உனது வயது அப்படி.

நானும் உனது வயதில் இருந்தேன் என்பதனை மறந்துவிடாதே. உன்நிலை, உன்மன உணர்ச்சிகள் எல்லாம் எனக்கு விளங்குகின்றன. ஆனால் மகளே! நீ எனது கடிதத்தின் காத்திரத்தினையோ, அதன் காரணத்தையோ உணரவில்லை. நான் ஒன்றைக் கூறுவதென்றால் அதனைத் தீர யோசிக்காமல் அவசரப்பட்டுக் கூறமாட்டேன். நீ மட்டுமில்லை, உன் வயதை ஒத்த ஏனைய பெண்களும் தாங்கள் நினைப்

> அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வரும் மடல் மோதலில் இருவர் தரப்புகளில் இருந்தும் பல கருத்துக்கள் வெளிக் கொணரப்படுகின்றன.
>
> இம் முறையும் அம்மா தரப்பில் இருந்து கிடைத்த கடிதங்களில் ஒன்று இங்கு பிரசுரமாகிறது.
>
> இந்த மடலை வரைந்தவர் பட்டதாரியான யாழ். செயலக பெண் (முன்னாள்) உயர் அதிகாரியான
>
> "சிவாதி"

பதைப் பட்டெனக் கூறுவதும், எதிர்வாதமிடுவதும் இப்பொழுதெல்லாம் சகஜம். இதற்குக் காரணம் வேறொன்றுமில்லை, சந்ததி இடைவெளிதான்.

எனக்கும் உன்வயதில் என் அம்மா கூறும் அறிவுரைகள் பலவும் பிழை போல் இருந்ததுண்டு. ஆனால் என் கருத்துக்கள் என் மனதிலே தோன்றி மனதிற்குள்ளேயே சங்கமமாகி விடும். இப்பொழுது முதுமையின் படியிலே நின்று சிந்திக்கும் பொழுது, என் அம்மா கூறியவை எவ்வளவு உண்மை என்பதனை உணரமுடிகின்றது. அதுதான் அனுபவம் தந்த பாடம்.

நானும், பல்கலைக்கழகத்தில் கற்று தொழில் புரிந்தாலும், வாழ்க்கைக்கு அனுபவம் தந்தபாடம் தான் அதிகம். அனுபவ அறிவுகொண்டு நான் உனக்குக் கூறும் புத்திமதிகள் கசப்பாக இருக்கும். ஆனால் பிற்காலத்தில் இவையே உனக்குச் சரியாகத் தோன்றும்.

மகாத்மாகாந்தியைச் சத்தியவானாகவும், மகாத்மாவாகவும் ஆக்கியது தாயின் போதனையும், வழிகாட்டலுமே. சான்றோர் தங்

**மடல் மோதல்**

கள் அனுபவங்களைப் பொன்மொழிகளாக வடித்தனர். பெற்றோர் தங்கள் அனுபவங்களைப், புத்திமதிகளாகப் பிள்ளைகளுக்கு வழங்குகின்றனர். சுயசிந்தனைக்கும், சுய செயலுக்கும் மதிப்பளிப்பது என்று கூறி அவற்றைச் சிந்திக்காது தூக்கி வீசிவிட முடியுமா?

"நான் உங்கள் மகள், உங்களுக்கு என்னைப் புரியாதா?" என்று நீ எழுதி இருந்தாய் எனக்குத் தெரியாதா நீ என் மகள், தவறு செய்ய மாட்டாய் என்று. எனினும் இடம், காலம், சந்தர்ப்பம், சூழ்நிலை, பழகும் நண்பர்கள் காரணமாகத் தங்கள் வாழ்க்கையையே உடைந்துபோன கண்ணாடி ஆக்கியோரும் உளர்.

விஸ்வாமித்திர மகரிஷியே தவறிழைக்கும் பொழுது. நீஎன்ன முக்காலமும் உணர்ந்த முனிவருமில்லை, தெய்வ அவதாரமுமில்லை என்பதனை நினைவிற்கொள். என் வாழ்க்கையெனும் புத்தகத்தில் ஒரு சிறு கறுப்புப் புள்ளிதன்னும் விழாததற்குக் காரணம் எனது தாயின் அறிவுரைகளைப் போற்றியதே. அதேபோல் உன் வாழ்க்கையிலும் ஒரு கறுப்புப் புள்ளிகூட விழக்கூடாது என்ற ஆதங்கத்தில் தான் நான் உனக்கு அறிவுரை எழுதினேன். நீ நெறி பிறழ்ந்தால் உன்னை மட்டுமா தூற்றுவார்கள்? "தாய் வளர்த்த வளர்ப்பைப் பார்," என்று என்னையுமல்லவா தூற்றுவர்.

நீ எனது மகள், உனக்கு என்னைப் புரியாமல் வேறு யாரால் என்னைப் புரிய முடியும். நீ எழுதியது போல் எனக்கு வக்கிரபுத்தியில்லை; தன்னலமற்ற தாய்ப் பாசம் தான் மகளே!, தாய்ப்பாசம் தான். [illegible] செய்யும் தியாகங்கள் உனக்கெங்கே தெரி

( 9ஆம் பக்கம் பார்க்க)

## சாகும் போதும்....

(மூன்றாம் பக்கத் தொடர்)

மனைவி வேண்டும். எனக்குப் பிள்ளைகள் வேண்டும் எனவே, வீடொன்று வேண்டும் 'நீ எனக்கொரு வீடு தருவாயா?,'

"என்னிடம் வீடில்லை" என்றது மரம். "காடே" "எனது வீடு, ஆனால் கிளைகளை வேண்டுமானால் வெட்டி வீடொன்று கட்டிக்கொள்; நீ மகிழ்ச்சியாய் இருக்கலாம்" — என்றது.

சிறுவன் மரத்தின் கிளைகளை வெட்டி வீடுகட்ட வேறிடம் எடுத்துச் சென்றான்; மரம் மகிழ்ந்தது.

ஆனால் சிறுவன் நீண்டகாலம் வராதிருந்தான்.

அவன் திரும்பி வந்தபோது மரம் மகிழ்ச்சிப் பெருக்கில் பேச்சிழந்திருந்தது. "வா, குழந்தாய்" மெல்லச்சொன்னது மரம் "வந்து விளையாடு"— என்று.

விளையாடுவதற்கு நான் மிக வயது முதிர்ந்தவனாகிவிட்டேன்; துன்பமாயுமிருக்கிறது" என்றான் சிறுவன். "எனக்கொரு வள்ளம் வேண்டும். இவ்விடமிருந்து வெகுதூரம் என்னை எடுத்துச் செல்ல. நீ எனக்கொரு வள்ளம் தருவாயா?"—என்று கேட்டான்.

"எனது நடுமரத்தை வெட்டி வள்ளமொன்று செய்துகொள்" மரம் சொன்னது. "அதில் நீ வெகுதூரம் சென்று மகிழ்ந்திருக்கலாம்."

சிறுவன் அதன் நடுமரத்தை வெட்டினான். வள்ளமமைத்து வெகுதூரம் சென்றான்.

மரம் மகிழ்ந்தது... ஆனால் உண்மையில் அல்ல

மிக நீண்ட காலத்தின் பின் சிறுவன் மீண்டும். வந்தான். "சிறுவனே, நான் வருந்துகிறேன்" என்றது மரம். "உனக்களிப்பதற்கு ஒன்றும் மீதமில்லை— எனது பழங்கள் போய்விட்டன" என்றது மரம்

"எனது பற்கள் பலமிழந்து விட்டன" என்றான் சிறுவன். "எனது கிளைகள் போய்விட்டன" என்றது மரம். "அதில் நீ தொங்கி விளையாட முடியாது." "கிளைகளில் தொங்கி விளையாட நான் முதிர்ந்தவனாகி விட்டேன்," என்றான் சிறுவன்.

"எனது நடுமரம் போய் விட்டது" என்றது மரம். "நீ அதில் ஏறமுடியாது—"

"ஏறுவதற்கு நான் மிகக் களைப்படைந்திருக்கிறேன் என்றான் சிறுவன்.

"நான் மிக வருந்துகிறேன்" பெருமூச்சு விட்டது மரம்.

"நான் உனக்கு ஏதாவது தரவே விரும்புகிறேன்; ஆனால் தருவதற்கு என்னிடம் ஒன்றும் மீதமாக இல்லை. நான் பழைய அடிமரம் மட்டுமே; நான் வருந்துகிறேன்" என்றது மரம்.

"எனக்கு இப்போதெல்லாம் அவ்வளவு தேவைகள் இல்லை" என்றான் சிறுவன். "எனக்கோர் அமைதியான இடம் வேண்டும் இருந்து இளைப்பாற நான் மிகக் களைத்துவிடேன்." "நல்லது" என்றது மரம் தன்னை முடிந்தளவு நிமிர்த்திக் கொண்டு.

"நல்லது" பழைய அடிமரம் இருந்து இளைப்பாற உகந்ததே; வா குழந்தாய் வந்து இருந்து கொள் இருந்து இளைப்பாறு — என்று அழைத்தது.

சிறுவன் அப்படியே செய்தான். மரம் மிக மகிழ்ந்தது.

[நன்றி: ஒளி (போரூட் வெளியீடு) - 1993]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# பாடசாலை செல்ல முடியாத நிலையில் குடாநாட்டில் 20 ஆயிரம் சிறுவர்கள்!

## வறுமையே பிரதான காரணம்

யாழ்ப்பாணம், ஓக 9

யாழ். குடாவில் 20 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர் என யாழ்செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வறுமை நிலை காரணமாக தமது குடும்பத்துக்காக தம்மை வருத்தி சிறு சிறு தொழில்களில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ச்சியான யுத்தம் மற்றும் இடம்பெயர்வுகள் காரணமாக குடும்பத் தலைவர்களைப் பிரிந்துள்ள குடும்பங்களிலுள்ள சிறுவர்கள் பலரே பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையிலுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிறுவர்கள் பாடசாலை செல்வதற்குரிய உடுப்புகள், கல்வி உபகரணங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான வருமானம் எதுவும் இல்லாத நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் தற்போது 425 பாடசாலைகளில் 1 இலட்சத்து 8 ஆயிரத்து 745 மாணவர்கள் கல்வி கற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சில பிரதேச செயலர் பிரிவுகளில் அரச சார்பற்றதொண்டர் நிறுவனங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களை இனம் கண்டு உதவி அளித்து வருகின்ற போதும் இந்த உதவிகள் மூலம் கல்வியை மட்டுமே அவர்கள் கற்க முடிகிறது. ஆனால் அவர்களின் பட்டினி நிலையைப்போக்க முடியாமலிருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது. (இ-5)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு நாள்கு குளிரூட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ். போதனா வைத்தியசாலைக்கு 4 குளிரூட்டிகள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

இக் குளிரூட்டிகள் கொழும்பில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இக் குளிரூட்டிகள் விரைவில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இதேவேளை மேலும் ஆறு குளிரூட்டிகள் யாழ்.போதனா வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## அம்புலன்ஸ் பழுது

நெல்லியடி, ஓக. 9

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் கடந்த சில தினங்களாகப் பழுதடைந்து இருப்பதனால், இங்கிருந்து அவசரநோயாளிகளை யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்ல தனியார் வாகனங்கள் பயன்படுத்தப் பட்டுவருகின்றன. (இ-109)

## மாகோவில் 4 ஆயிரம் பீப்பாய் தார்

யாழ்ப்பாணம், ஓக. 9

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ளமாகோ கப்பலில் 4 ஆயிரம் பீப்பாய்தார் எடுத்து வரப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எடுத்து வரப்பட்ட தார் பீப்பாய்களை இறக்கும் வேலைகள் நாளை நடைபெறவுள்ளது. (இ-5)

## நோயாளர் அவல நிலை

நெல்லியடி, ஓக. 9

மந்திகை மருத்துவ மனையிலுள்ள பெண்கள் மன நோய் வார்ட் கூரை சேதமடைந்துள்ளது.

இதனால் மழை பெய்யும் நேரம் நோயாளர்கள் விறாந்தையில் படுக்கும் அவல நிலைமை இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது. (இ-109)

## கோப்பாய் கோட்ட ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஓக, 9

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி தவிர்ந்த கோப்பாய் கல்விக்கோட்டத்தின் ஏனைய பாடசாலைகளின் ஆசிரியர்கள் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தங்களது பாடசாலைகளுக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் —

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர்கள் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்துக்கும், புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி ஆசிரியர்கள் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்துக்கும் சமுகமளிக்கவேண்டும் என்றும் —

கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் ஆ. இராஜேந்திரன் கேட்டுள்ளார். (ஐ-8)

## கணேஷகுமார் கிண்ண கிரிக்கெட் அணிகள் பெற்ற புள்ளி விவரம்

யாழ்ப்பாணம், ஓக. 9

'டொனால்ட் கணேஷகுமார்' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாவது சுற்றில் ஒன்பதாவது போட்டியில் இன்று சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதுகின்றது.

'சன் ரேடர்ஸ்' நிறுவன ஆதரவில் நடைபெறும் இந்த ஆட்டம் இன்று காலை 9. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

இதுவரை நடைபெற்ற எட்டு ஆட்டங்களில் அணிகள் பெற்ற புள்ளிவிவரங்கள் வருமாறு:-

| அணி | பிரிவு | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| யங்ஸ்ரார் | A | 2 | 2 | — | 16. 37 |
| பல்கலைக்கழகம் | C | 2 | 2 | — | 15. 14 |
| ஜொலி ஸ்ரார்ஸ் | C | 2 | 1 | 1 | 11. 13 |
| ஜொனியன்ஸ் | B | 1 | 1 | — | 10. 49 |
| கே. ஸி. ஸி. ஸி. | C | 2 | — | 2 | 7. 41 |
| சென்றலைட்ஸ் | B | 1 | 1 | — | 6. 00 |
| மானிப்பாய் பரிஷ் | A | 1 | — | 1 | 3. 13 |
| பற்றீஷியன்ஸ் | A | 1 | — | 1 | 2. 94 |
| ஓல்ட் கோல்ட்ஸ் | B | 2 | — | 2 | -3. 71 |

## திருமண சந்தையில்....

(எட்டாம் பக்கத் தொடர்)

யப்போகின்றது. பாரதியார் கூறியது போல ''உன் கண்ணில் நீர் வழிந்தால் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி'' அப்படிப் பட்ட எனக்கு எப்படித்தான் வக்கிரபுத்தி வரும். நான் கண்டு உணர்ந்த கோலங்களைத்தான் உனக்கு எழுதினேன்.

உன்னைப் பட்டுப்பாவாடை அணிந்து, நகைகளால் அலங்கரித்ததைப்பற்றிக் குறை கூறுகின்றாய். நான் அம்மாவின் பழைய இணைக் கூறையைத்தான் வீணாகப் போகாமல் உனக்கு பட்டுப்பாவாடை ஆக்கினேன். உன்னை அலங்கரித்துப் பார்க்கவேண்டும் என்ற தாய்ப்பாசத்தின் உந்துதலினால் தான் இருந்த நகைகளைப் போட்டு உன்னை அலங்கரித்தேன். உனக்குத் தெரியும் தானே நான் ஒருநாளும் என்னை அலங்கரிப்பதில்லை என்று.

நீ சைக்கிளில் வெளியில் செல்வதனையும் பெற்றோரை வைத்து உழக்குவதனையும் பெரிதாக எழுதியிருந்தாய். ஆனால் நான் எனது அம்மாவிற்கு உதவியாக பதினான்கு வயதில் ஏற்றுக்கொண்ட குடும்பப் பொறுப்பை இன்றும் செக்குமாடாகச் சுமக்கின்றேன், அது உனக்குத்தெரியாது. ஆனால் உன்னை ஒரு துரும்பைக்கூட அசைக்க விடுகின்றேனா? நான் அலுவலகத்திற்கோ வீட்டிற்கோ வேறு எங்கென்றாலும், எவ்வளவு தூரமென்றாலும் கால்கள்வீங்கி, கால்நரம்புகள் புடைக்க நடந்திருப்பேன். உன்னையும், உன் சகோதரர்களையும் தோள்களிற் சுமந்து நடந்திருப்பேன். நீங்கள் நோய் வாய்ப்பட்ட சமயம் ஊண், உறக்கமின்றி, உங்கள் பக்கத்தில் இருந்து கவனித்தேன்.

இறுதியாக ஒன்று, ''நீ திருமணச் சந்தையில் விலைபோகின்றவள்'' என்று நான் எழுதியதற்காக கொதிக்கின்றாய். நான் என்ன யதார்த்தத்தைத் தானே எழுதினேன். உள்ளதைச் சொன்னால் உள்ளம் குறுகுறுப்பதேன்? காலங் காலமாக நடைமுறையில் உள்ளதுதானே? எனக்கு மட்டும் இந்நடைமுறையில் விருப்பமா?

எதிலுமே மாற்றத்தை விரும்புகின்ற, மேலைநாட்டுப் பாணியினைப் பின்பற்றுகின்ற உன்போன்ற பெண்கள் ஏன்தான் இவ்விடயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் இல்லை; ஏற்படுத்த முனையவும் இல்லை. முன்னறெல்லாம் நல்ல இடம், குணம், தரம் அறிந்து பெண்களைத் திருமணம் செய்து கொடுத்தனர். ஆனால் இப்பொழுதோ! நினைக்கவே வெட்கமாகவும், வேதனையாகவும் உள்ளது. தரம், குணம், கட்டழகு, தொழில் ஒன்றையுமே பாராது பெண்கள் கண்மூடித்தனமாகத் திருமணச் சந்தையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றார்கள். மாப்பிள்ளை யார் என்றால் சுவிசில், ஜேர்மனியில், பிரான்சில் அல்லது கனடா என்பதனைத் தவிர வேறொன்றும் தெரியாது. ஆனால் விலையோ அதிகம். போலிச் சந்தையில் ஏமாற்றப்பட்டு அங்கு சென்று கண்ணீர் விடுவோரோ பலர். கொத்தடிமைகள் போல் உழைத்துக் கணவனின் குடும்பத்தை உயர்த்துவோர் ஏனையோர் இவற்றுக்குக் காரணமாகப் பெற்றோரைச் சாட முடியாது.

உன் போன்ற பெண்களின் சுய சிந்தனையும் சுயவிலாசமும் இவ்விடயத்தில் மட்டும் எங்கே மழுங்கிப் போய் விட்டது. எல்லாமே வெறும் வாய்ச்சலாடல் தானா? இவற்றைப் பார்க்க உனக்கு வெட்கமாக இல்லையா? உன்னைப் போன்ற பெண்கள் முன்வந்து இதனை மாற்றியமைக்கக் கூடாதா?

நீ காலம் கனியும்வரை காத்திருப்பேன் என்றும் ஒருமுறை எழுதியிருக்கிறாய். காலம் கனியாது நீயும் உன்னைப்போன்ற பெண்களும் முன்வந்து புரையோடி இருக்கும் இச்சந்தை முறையை மாற்றியமைக்கப் புரட்சி செய்தால் என்ன? சற்று சிந்தித்துப் பார். வெறும் சவால்களை விடாமல் செயலிலே இறங்கு [illegible] பொருளாக நினைக்காதே. எனது நல்லாசிகள் என்றென்றும் உனக்கிருக்கும்

உனது அன்புள்ள அம்மா

## தலைமயிரை...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

களைப் பலி கொள்கிறதே!

மறுகணம் எமது தலைக்கு மேலால் அலை அடித்துச் சென்றது. எங்கும் அவலக் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தவேளை அக்கா கடலில் மூழ்கினார். மூழ்கிய அவரை தலைமயிரில் பிடித்து இழுத்து வந்து கடலில் நடப்பட்டிருந்த தடியில் சேர்த்துக் கட்டினேன்.

அவரது உயிர் கடலில் சங்கமமாகியது. திரும்பிப் பார்த்தேன் யாரும் உதவிக்கு வரவில்லை. உயிரிலும் பார்க்க உடைமைகள்பெரிதா என்ற எண்ணத்தினால் என்னிடமிருந்த ஒன்றரை இலட்சம் ரூபா பணம், 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை உட்பட, பொதிகள் அனைத்தையும் கடலில் தூக்கி எறிந்தேன். பலரது உடைமைகள் அவ்வாறு கடலில் வீசப்பட்டு அவை கடலில் அள்ளுப்பட்டுச் செல்வதையும் கண்டேன்.

அப்போது மீண்டும் பெரும் இரைச்சலுடன் வந்த அலையில் எனது அன்ரியும், எம்முடன் பயணம் செய்த நெல்லியடியைச் சேர்ந்த மாணவனும், கம்பர்மலையைச் சேர்ந்த வயோதிப மாதுவுமாக மேலும் மூவர் கடல் அலையினால் அள்ளுண்டு சென்றதைக் கண்டேன்.

மாலை நேரம், பின் காரிருளாக மாறியது. நான் அக்காவின் சடலத்துடன், கடலில் நின்று இரவிரவாகத் தத்தளித்தேன், நானும் கடலில்தான் சாகப்போகின்றேன் என்ற எண்ணத்தில், குளறி அழுதேன். ஆளரவமற்ற இடத்திற்கு யார் வரப் போகின்றார்கள்...?

அந்தச் சனிக்கிழமை இரவு பயங்கர இரவாகும். எனது வாழ்வில் மறக்க முடியாத இரவாகும்.

கடலில் மூழ்கிய மூவரது சடலங்களுடன் அக்காவின் சடலத்தையும் கடல் அலை கொண்டு சென்றது. நான் கடலில் தனிமையானேன்.

தெய்வாதீனமாக (26ஆம் திகதி)ஞாயிறு காலை 7 மணியளவில் ஒரு படகு அக் கடற் பரப்பில் சென்றது. அதனைப் பார்த்த நான் சைகை காட்டி அழைத்தேன். சில நிமிட நேரத்தில் அப் படகு என்னருகில் வந்தது. அதில் உள்ள இரு மீனவர்கள் என்னைப் பார்த்ததும் உடனேயே தமது படகில் ஏற்றிக் குருநகருக்குக் கொண்டு வந்தார்கள்.

அங்கிருந்து எனது ஊருக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டது. பெற்றோரும், உறவினரும் என்னைத் தேடி வருமுன்னர், எனது அக்காவினதும், அன்ரியினதும் சடலங்கள் அக் கடற்கரையில் கரை ஒதுங்கியதாகவும் கேள்வியுற்றேன்.

சகோதர பாசத்துடன் ஒன்றாகப் பயணத்தை மேற்கொண்ட நான், இறுதியில் எனது அக்காவையும், அன்ரியையும் கடலுக்கு இரையாக்கி விட்டமையை எண்ணும்போது என் உடல் புல்லரிக்கின்றது — என்று கூறினார். (அ-109)

மானிப்பாய்
கோவில்பற்று பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்

பகிரங்க ஏலவிற்பனை

எமது சங்கத்தின் லொறிக்குப் பாவிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள 8×25 ரயர்கள் 15-8-98 சனிக்கிழமை காலை 11. 30 மணிக்கு சங்க முன்றலில் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படும். ஏலம் எடுப்பவர்கள் பணத்தை உடன் செலுத்திப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

— பொதுமுகாமையாளர்.

ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.
8-8-98

(ஸி/ 4502)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ பீடத்துக்குக் குறைந்தது 150 மாணவரையாவது அனுமதிக்குக

## யாழ். மாநகர சபை ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஓக. 9

பல்கலைக்கழக அனுமதியில் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கும்—

மாணவர்களுடைய உடல் உளத் தாக்கங்களையும் ஆதங்கத்தையும் இல்லாமல் செய்வதற்கும்—

குறைந்த பட்சம் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 150 மாணவர்களை அனுமதிக்குமாறு யாழ். மாநகரசபை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜரில் பிரதிகள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுத் தலைவர், உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1995 ஆம் ஆண்டின் பின் யாழ். மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் பல்கலைக்கழக புள்ளி அடிப்படை அனுமதியில்முன்பிருந்தநிலைமையை விட மோசமான நிலைமை இருந்து வருகின்றது.

யாழ். மாவட்டம் பின் தங்கிய மாவட்டமென அளிக்கப்பட்ட வாக்குறுதியின் படி இட ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ பட்டப் படிப்புக்காக 1997 இல் 66 மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆனால் அனுமதிக்கப்பட வேண்டியவர்களோ 125 மாணவர்கள் என்று அதற்குரிய கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1998 ஆம், 99 ஆம் ஆண்டுக்கான அனுமதி பற்றிய கைநூலில் நூறு மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய அனுமதிகள் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்னைய காலங்களை விட அதிகமாகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்ப்பாணமருத்துவபட்டப் படிப்புக்கு மாணவர் அனுமதி 125 இலிருந்து 100 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இது மோசமான இனப் பாகுபாடுள்ள விடயமாகும்.

இப்படி மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-5)


உ

நல்லூர் சைவ மகாசபை நடத்தும்

நல்லூர் மஹோற்சவ கால

**தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு**

இடம்: முத்து விநாயகர் ஆலயம்
நல்லூர் மேற்கு வீதி

காலம்: 09-08-98 ஞாயிறு தொடக்கம்
23-08-98 வரை.

நேரம்: மாலை 5-15 மணி

**'கம்பராமாயணம்'**



நிகழ்த்துபவர்:
கான கதா வாரிதி
முத்தமிழருவி
அருள் மொழி அரசு

பிரம்மஸ்ரீ சிவ. வை.
நித்தியானந்த சர்மா

அணிசேர் கலைஞர்கள்:

திரு. S. பிச்சையப்பா — முகவீணை
திரு. K. சண்முகராசா — புல்லாங்குழல்
திரு. T. இராஜன் — மிருதங்கம்
திரு. K. குப்புசாமி — கெஞ்சிரா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நல்லூர் சைவ மகாசபை

விளம்பர அன்பளிப்பு:

திரு. தியாகராஜா (உரிமையாளர்)
சஞ்சீவி, சங்குசக்கரம், பெயின்ற் ஹவுஸ்
பரமேஸ்வரா சந்தி, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (58233)



**அறிவித்தல்**

பிரசித்த நொத்தாரிஸ்

**திரு. வ. தம்பிப்பிள்ளை**

ஆகிய நான் 13-8-98 தொடக்கம் 31-8-98 வரை கீழ்க் காணும் முகவரியில் தங்கிஇருப்பேன். உறுதி பெற வேண்டியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்.

Dr. N. சண்முகராசா
சபாபதி வீதி, கொக்குவில். (58213)



**விற்பனைக்கு**

எமது ஸ்தாபனத்தில் கீழ்க்காணும் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு.

1. கொண்டா லான்சர் கஸ்ரம் மொடல் 50/90
2. கொண்டா—C 50
3. ஜமஹா—50

விசேட கழிவு வழங்கப்படும்.

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்**

இல: 171, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(58209)


## மின் தடை

நெல்லியடி, ஓக. 9

வடமராட்சிப் பகுதியில் உள்ள வ.உ.வெட்டி வன்னிச்சி அம்மன் கோயிலடிப் பகுதியில் இயங்கிவந்த ஜெனரேற்றர் கடந்த சில நாள்களாகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது

## காமினி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒருவரின் துண்டிக்கப்பட்ட தலையை இனங்காண்பதற்கான விசாரணைகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

துண்டிக்கப்பட்ட தலை ஆய்வு கூடப்பரிசோதனைக்காக இங்கிலாந்திலுள்ள எடின்பேக் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மஜிஸ்திரேட் நீதி மன்றில் தாக்கல் செய்த அந்தரங்க அறிக்கையில் இந்த விவரங்களைத் தெரிவித்துள்ளனர். (இ-9)

## கொரியக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆனால் குறிப்பிட்ட திகதியன்று கப்பல் திருமலைக்கு வந்து சேரவில்லை.

மேற்படி கப்பல் உரிமையாளருக்கும் தென்கொரிய அரசாங்கத்துக்கும் இடையில் உள்ள வழக்குக் காரணமாகவே குறிப்பிட்ட திகதியில் கப்பல் இலங்கை நோக்கிப் புறப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பின்னர் இந்த மாதம் முதலாம் திகதியளவில் இக் கப்பல் இலங்கை நோக்கிப் புறப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் கப்பல் உரிமையாளர் மீது அரசு மேலும் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருப்பதாகவும் —அதன் காரணமாகவே கப்பல் இலங்கை நோக்கிப் புறப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே தான் பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு தென்கொரியக் கப்பலை இனியும் நம்பியிருப்பதில் பயன் இல்லை என்று அதிகாரிகள் மத்தியில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் —

லங்கா முடித்த சரக்குக்கப்பலையே பயணிகள் சேவையில் பயன்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## 605 அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்ட அனைவரும் திருமலைக் கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டனர்.

பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கும் "லங்கா முடித" தற்போது கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நின்று யாழ். மாவட்டத்துக்குரிய ஒரு தொகுதிப் பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கிறது.

பொருள்கள் ஏற்றும் பணி முடிவடைந்ததும் இம் மாதம் 15 ஆம் திகதியளவிலேயே அக்கப்பல் காங்கேசன்துறையை நோக்கிப்புறப்படும் எனவும்—

பின்னர் காங்கேசனில் பொருள் இறக்கும் பணியை முடித்துக்கொண்டு திருமலை வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னரே திருமலை கண்ணாடித் தொழிற்சாலை முகாம் மற்றும் திருமலை உள்துறைமுக வீதியில் உள்ள கலாசார மண்டபம் ஆகியவற்றில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகள் கப்பல் முலம் 25 ஆம் திகதியளவில் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படுவர் என திருமலைப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மன்னார் பேசாலை அகதிகள் முகாமில் இன்னமும் யாழ். செல்வதற்கென 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகளும், வவுனியாவில் 2 ஆயிரம் அகதிகளும் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7-9-164)

## பிரதேச சபை...

(முதலாம் பக்கத் தொடர்)

மிகவும் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியிலும், 6 பேர் கேகாலை மாவட்ட ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வேளை இக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் இருந்து மீட்கப்பட்ட சில பொருள்கள் இரசாயன பகுப்பாய்வாளர்களின் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொலீஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். (இ-7)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

நிர்வாகம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணாமற்போன இளைஞர்கள் யுவதிகளின் நிலை குறித்தும் —

கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது தாய், தம்பி, உறவினரின் படுகொலை தொடர்பான தீர்ப்பைத் தொடர்ந்து உருவாகியுள்ள செம்மணிப் புதைகுழி விவகாரம் குறித்தும் — யாழ். சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு கடந்த மாதம் 12 ஆம் திகதி கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தது.

அக் கடிதம் குறித்தும், அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்தும் தொடர்ந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நேற்று மற்றொரு கடிதம் ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குமக்கள் குழு அனுப்பி வைத்தது.

நேற்றைய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செம்மணியில் புதைகுழிகள் தோண்டுவதற்கும், அங்கு மீட்கப்படும் பொருள்களைப் பரிசோதனை செய்வதற்கும் நிபுணத்துவ உதவிபெறப்படல் வேண்டும்.

நிபுணத்துவ உதவியை நிறைவேற்றுவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு சாதாரண சட்டதிட்ட நடைமுறைகளை பயன்படுத்தாது தனது விசேட அதிகாரத்தை உபயோகித்து உடன் செயற்படக் கூடிய நடைமுறையைக் கையாளுதல் வேண்டும்.

புதைகுழிகளைத் தோண்டுவதில் தாமதம் ஏற்படின் ஆணைக்குழு எடுக்கும் முயற்சி பயனற்றதாகி விடும் அல்லது கண்துடைப்புக்காக செய்யும் காரியமாகி விடலாம்

புதைகுழி அகழ்தலிலும், அதனது தொடர் செயற்பாட்டிலும், பாதிக்கப்பட்டோரின் பிரதிநிதிகளும், அவர்களின் நலன்களில் அக்கறையுள்ள அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் ஆணைக்குழுவுடன் சேர்ந்து செயற்பட்டால் உண்மையும் நீதியும் நிலை நாட்டப்படும் என்ற நம்பிக்கை யாழ். குடாநாட்டு மக்களுக்கு மட்டுமல்ல முழு உலகுக்குமே ஏற்படும்.

இப்படி கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காணாமல் போனோரின் விசாரணைகள் முழுமைபெற பின்வரும் விடயங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டுமென சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவையாவன;

யாழ். மாவட்டத்தில் காணாமற்போனோரின் சரியானதும் முழுமையானதுமான தகவல்கள் எவரிடமும் இல்லை. இதுவரை பல்வேறு அமைப்பினராலும் சேகரிக்கப்பட்ட விவரங்கள் வேறுபட்டவையாக உள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது கொள்கைத்திட்டத்துக்கு அமைய காணாமல் போனோரின் தகவல்களை வெளியிடுவதே இல்லை.

காணாமற்போனவர்களின் சரியான நிலைப்பாட்டை உறுதிப்படுத்த உதவி அரச அதிபர்களதும், கிராம அலுவலர்களதும் சான்றிதழ்கள் பெறுவது அவசியம் - காரணம் நடைமுறைச் சட்டங்களை அறியாத காணாமற்போனோரின் பெற்றோர் பலர் தமது பிள்ளைகள் காணாமல்போனமைகுறித்து உரியவர்களிடம் உரியதகவல்களைச் சமர்ப்பிக்கத் தவறிவிடுகின்றனர்.

இராணுவமுகாமில் காணாமல்போனவர்கள் தொடர்பான விசாரணையில்—

மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு வெவ்வேறு இடங்களில் இருந்து கிடைக்கப்பெற்றிருக்கும் விவரங்கள் வேறுபட்டு இருப்பதாக அறிய வருவதால் இதனைக் கணனி ஊடாக நெறிப்படுத்தி, சரியான விவரங்களைப்பெற்று உடனுக்குடன் வேண்டிய விவரங்களுடன் விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] மனையில் 09-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org